Saturday மெயில்

සැටඩේ මේල්

A Fascinating Weekly Bulletin

01 - 11

12-12-2009
பக்கங்கள்: 24
விலை: 15/=

# இந்திய அரசுக்கு உயர் நீதிமன்றத்தின் விசித்திரமான ஆலோசனை

விபசாரத்தை கட்டுப்படுத்துவது சாத்தியமில்லையென்றால், அதை சட்டபூர்வமாக்குவது குறித்து பரிசீலனை செய்தால் என்ன என்று இந்திய உயர்நீதிமன்றம் அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறது.

இந்தியாவில் சிறுவர்கள் பெருமளவில் கடத்தப்பட்டு வருவதையடுத்து அதைத் தடுப்பதற்கு அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனமொன்று உயர்நீதிமன்றத்தை நாடியிருந்தது. சிறுவர்கள் கடத்தப்படுவதை தடுப்பதற்கு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட வேண்டுமென்று அந்த தொண்டர் நிறுவனம் மனுவில் கேட்டிருந்தது.


மனு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது கடந்த புதன்கிழமை நீதியரசர்கள் தல்வீர்பண்டாரியும் ஏ.கே.பட்நாயக்கும் அரசாங்கத்தின் சார்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் கோபால் சுப்பிரமணியத்தைப் பார்த்து 'விபசாரத்தை உலகின் மிகவும் பழமை வாய்ந்த தொழில் என்று நீங்கள் கூறுகிறீர்கள். சட்டத்தினால் அதைக் கட்டுப்படுத்த முடியாவிட்டால் ஏன் சட்டபூர்வமானதாக்கக் கூடாது? சட்டபூர்வமாக்கப்படும் பட்சத்தில் விபசாரத் தொழில்த் துறையை அரசாங்கம் கண்காணித்து அதில் ஈடுபடுபவர்களுக்கு மருத்துவ உதவியை, புனர்வாழ்வை அளிக்கலாமல்லவா?' என்று கேட்டனர்.

பெண்கள், சிறுவர்கள் கடத்தப்படுவதைத் தடுப்பதற்கு சிறந்த மார்க்கம் விபசாரத் தொழிலைச் சட்டபூர்வமாக்குவதேயாகும். தண்டனை வழங்குவதற்கு வகை செய்யும் சட்டங்களின் மூலமாக உலகின் எந்தப் பகுதியிலுமே விபசாரம் கட்டுப்படுத்தப்பட்டதில்லை என்றும் நீதியரசர்கள் தெரிவித்தனர்.

அப்போது சொலிசிட்டர் ஜெனரல் கோபால் சுப்பிரமணியம் 'உயர்நீதிமன்றத்தின் யோசனையை அரசாங்கம் பரிசீலிக்கும்' என்று பதிலளித்ததாக ரைம்ஸ் ஒப் இந்தியா பத்திரிகை வியாழனன்று தெரிவித்தது.

பாலியல் தொழிலாளர்கள் ஏதோ ஒருவகையில் சட்டத்தின் பிடியில் சிக்காமல் தொடர்ந்து செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். சட்டத்தின் மூலமாக உலகில் எங்குமே அதைத் தடுக்கக் கூடியதாக இருக்கவில்லை. விபசாரத் தொழில் மிகவும் நவீன முறையிலும் சூட்சுமமாகவும் நடத்தப்படுகிறது என்றும் நீதியரசர்கள் தெரிவித்தனர்.

இந்தியாவின் நிகர உள்நாட்டு உற்பத்தி அதிகரித்து வருவது பற்றி பெருமையாகப் பேசப்படுகிறது. பொருளாதார நிலைமை அவ்வாறு இருப்பதானால் சனத்தொகையின் 37 சதவீதமானவர்கள் இன்னமும் வறுமைக் கோட்டிற்குக் கீழேயே ஏன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். வறுமையின் காரணமாகவே பாலியல் தொழில்களும், சிறுவர்கள், பெண்கள் கடத்தலும் அதிகரிக்கின்றன. நிகர உள்நாட்டு உற்பத்தி பற்றி நாம் பேசுகின்றோம். வறுமைக் கோட்டிற்கு கீழே வாழ்கின்றவர்களின் எண்ணிக்கை 30 சதவீதத்திலிருந்து 37 சதவீதமாக அதிகரித்திருக்கிறது. அப்படியென்றால் நாம் பேசுகின்ற பொருளாதார அபிவிருத்தியின் அர்த்தம் தான் என்ன? நான்கோ அல்லது ஐந்தோ குடும்பங்கள் பொருளாதார ரீதியில் அபிவிருத்தியடைவதென்பது நிகர உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்பு என்று அர்த்தப்படாது. இதுதான் அபிவிருத்தியின் நிலையென்றால் எம்மால் எதுவுமே செய்யமுடியாது' என்றும் நீதியரசர்கள் சொலிசிட்டர் ஜெனரலைப் பார்த்துக் கூறினர்.



Registe… at G.P.O.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# இந்தியாவின் சனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் வறுமைக்கோட்டிற்குக் கீழ்

இந்தியாவில் மூவரில் ஒருவர் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்வதாக அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் புதிய ஆய்வொன்றின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

மக்கள் தங்கள் வீட்டுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களையும் சேவைகளையும் பெறுவதற்குச் செலவு செய்யும் பணத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வை பொருளியலாளர் சுரேஷ் ரெண்டுல்கர் மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்.

வறியவர்களிலும் வறியவர்களாக இருப்போரில் பெருந்தொகையான மக்கள் ஒரிசா,பீஹார் மற்றும் சதிஷ்கார் மாநிலங்களில் வாழ்கிறார்கள்.

நகரங்களில் வறியவர்களின் எண்ணிக்கை குறைந்திருக்கின்ற அதேவேளை, கிராமங்களில் வறியவர்களின் எண்ணிக்கை கடுமையாக அதிகரித்திருக்கிறது.

வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்கின்ற மக்களைத் தீர்மானிப்பதற்கு மக்கள் உட்கொள்ளும் கலோரியின் அளவே பாரம்பரியமாக அளவு கோலாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. சுரேஷ் ரெண்டுல்கர் இத்தடவை மக்கள் அன்றாடம் அத்தியாவசியப் பாவனைப் பொருட்களை வாங்குவதற்கும் சேவைகளைப் பெறுவதற்கும் செலவிடும் பணத்தை அடிப்படையாகக் கொண்டு புதிய பாணியில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் இருக்கும் மக்களைத் தீர்மானித்திருக்கிறார் என்பது கவனிக்கத்தக்கது.

புதிய முறையிலான மதிப்பீட்டின்படி இந்திய சனத்தொகையில் 37.2 சதவீதத்தினர் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழுகிறார்கள்.

கிராமப்புறங்களில் வாழும் மக்களில் 40 சதவீதத்துக்கும் அதிகமானவர்கள் மாதமொன்றுக்கு 447 ரூபாவை ஆள்வீத செலவினமாகக் கொண்டு வாழ்கிறார்கள். இத்தொகை வெறுமனே அத்தியாவசிய உணவுப் பொருட்கள், எரிபொருள், புடைவை,காலணி ஆகியவற்றுக்கே செலவிடப்படுகிறது.

உலகின் கவனத்தை ஈர்க்கக் கூடியதாக இந்தியப் பொருளாதாரம் அபிவிருத்தியடைந்திருக்கின்றபோதிலும் கடுமையான வறுமையில் வாழ்கின்ற இந்தியர்களின் எண்ணிக்கை போதுமானளவுக்கு விரைவாக வீழ்ச்சி காணவில்லை.

அரசாங்கம் சமூக நலன்புரித் திட்டங்களில் கூடுதல் கவனஞ்செலுத்தாவிட்டால் வறுமையைக் குறைப்பதென்பது கஷ்டமானதேயாகும் என்று அவதானிகள் கூறியிருக்கிறார்கள்.

# மாஸ்கோவில் அமெரிக்கர் குப்பை கொட்டிய இடம்



அமெரிக்க உல்லாசப்பிரயாணி ஒருவர் ரஷ்யத் தலைநகர் மாஸ்கோவுக்கு சென்றிருந்தார். தொடர்மாடி குடியிருப்பில் வீடொன்றை வாடகைக்கு எடுத்து அவர் தங்கியிருந்தார்.

மாஸ்கோவில் பல இடங்களையும் சுற்றிப்பார்வையிடுவதற்காக அடிக்கடி வெளியே செல்லவேண்டியிருந்ததால் தான் தங்கியிருந்த வீட்டை ஒழுங்காகத் தினமும் துப்புரவு செய்ய அவரால் முடியவில்லை.

குப்பை கூளங்கள் குவியலாகச் சேர்ந்துவிட்டன.

ஒருநாள் வெளியே எங்கும் போகாமல் வீட்டைத் துப்புரவுசெய்த அவர் குப்பை கூளங்களை ஒரு பையில் எடுத்துக்கொண்டு வெளியே போனார். எங்கே இவற்றைக் கொட்டுவதென்று அவருக்குத் தெரியவில்லை.

அங்குமிங்கும் அலைந்து குப்பையைக் கொட்டுவதற்கு இடந்தேடிக் கொண்டிருந்த அவரை மாஸ்கோ பொலிஸ் அதிகாரியொருவர் இடைமறித்தார்.

என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று பொலிஸ் அதிகாரி கேட்க அந்த அமெரிக்கர் குப்பையை எங்கே கொட்டுவதென்று தெரியாமல் அலைகின்றேன் என்று பதிலளித்தார்.

'சரி நான் உங்களுக்கு இடம்காட்டுகிறேன். அங்கே நீங்கள் குப்பையைக் கொட்டலாம்' என்று கூறி பொலிஸ் அதிகாரி அமெரிக்கரைக் கூட்டிச்சென்றார்.

பொலிஸ் அதிகாரி மிகவும் அழகான புற்தரையும் ரம்மியமான பூச்செடிகளும் நிறைந்திருந்த இடம்மொன்றுக்கு அமெரிக்கரைக் கூட்டிச் சென்றபின்னர் அங்கே குப்பையைக் கொட்டுமாறு கூறினார்.

இந்த அழகான துப்புரவான இடத்திலேயா குப்பையைக் கொட்டுவது என்று அமெரிக்கர் கேட்க அதுதான் ரஷ்யர்களின் பண்பு என்று பொலிஸ் அதிகாரி பதிலளித்தார்.

அழகான பூச்செடிகள் மேலாக குப்பையைக் கொட்டிவிட்டு வெளியே வந்த அமெரிக்கர் குப்பை கொட்டுகின்ற இடத்தைக் கூட ரஷ்யர்கள் இவ்வளவு அழகாக வைத்திருக்கிறார்களே என்று மகிழ்ச்சியடைந்தார்.

தனது மகிழ்ச்சியை தெரிவித்த அமெரிக்கர் இறுதியில் இது எந்த இடம் என்று பொலிஸ் அதிகாரியைக் கேட்டார்.

அவரிடமிருந்து பதில் வந்தது இது அமெரிக்கத் தூதரக வளாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் திருட்டு மின்சாரத்தினால் பறிபோகும் உயிர்கள்



யாழ்.குடாநாட்டில் மின்வெட்டு நிறுத்தப்பட்டு விட்ட நிலையில் சட்டவிரோத மின்சார பாவனை அங்கு இன்னும் பாரதூரமான பிரச்சினையாக இருந்து வருகிறது. இந்த திருட்டு மின்சார இணைப்பால் இந்த வருடத்துக்குள் 6 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதுவரை இவ்விடயத்தில் 6 பேர் மட்டுமே உயிரிழந்திருக்கின்றனர் என்று எவராவது கூற முற்பட்டாலும் இந்த உயிரிழப்புகளுக்கான காரணத்தை அனைவரும் கவனத்தில் எடுக்க வேண்டியது முக்கியம்.

திருட்டு மின்சார தொடர்புகளுக்கு மக்களின் பொருளாதார நிலைமை ஒரு காரணமாக இருக்கின்ற போதிலும் இந்த விடயத்தில் பெரும்பாலானவர்கள் போதிய வருமானங்கள் இருந்தும் சட்ட ரீதியாக மின்சார இணைப்பைப் பெறுவதில் அக்கறையின்றி செயற்படுவதாவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

யாழ்.குடாநாட்டை பெறுத்தவரை மின்சார வசதிகள் என்பது நாட்டின் ஏனைய பகுதிகளை விட சற்று சிரமமான விடயமே. மின்வெட்டிலிருந்து மிக அண்மையிலேயே அம்மக்கள் விடுபட்டிருக்கின்றனர். இந்த நிலையில், மின்விநியோகமற்ற கிராமப் புறங்களும் தீவுப் பகுதிகளும் அங்கு இன்னும் இருக்கத்தான் செய்கின்றன. இன்றைய வாழ்க்கைச் சூழலில் மக்களுக்கு மின்சாரம் என்பது அத்தியாவசிய தேவைகளில் ஒன்றாகி விட்ட சூழ்நிலையில் மின்சார வசதி இல்லாத மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதுடன், மின்சார வசதியைப் பெற்றுக்கொள்ள அம் மக்களுக்கு இருக்கும் எதிர்பார்ப்பையும் மறுத்து விட முடியாது. எனினும் அதற்கு திருட்டு மின்சாரம் மாற்று வழியாக அமைந்து விடவும் முடியாது.

யாழ்.குடாநாட்டில் மேற்குறித்தது போல் இந்த திருட்டு மின் தொடர்பில் சிறு குழந்தை ஒன்று உட்பட 6 பேர் உயிரிழந்திருக்கின்றனர். திருட்டு மின்தொடர்பு எடுத்திருந்த கம்பியை பிடித்தே அந்த குழந்தை உயிரிழந்திருக்கிறது. அத்துடன் திருட்டு மின்சார தொடர்பினால் வீட்டு கிணற்றின் குறுக்கே போடப்பட்டிருந்த இரும்புக் கம்பியில் மின்சாரம் பாய்ந்து கொண்டிருந்ததை அறியாமல் அதைப் பிடித்து ஒருவர் உயிரிழந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. அது மட்டுமல்லாது பாடசாலை அதிபர் ஒருவர் கூட தனது வீட்டுக்கு திருட்டு மின்சாரத்தை எடுக்க கம்பியை பிரதான மின்விநியோக கம்பியுடன் தொடுக்க முற்பட்ட போது மின்சாரம் பாய்ந்து உயிரிழந்துள்ளார். எனவே எமது தேவைகளுக்காகவே எடுக்கப்படும் இந்த திருட்டு மின்சாரம் இறுதியில் எமக்கே எமனாக வந்து விடும் அபாயமே இங்கு நிலவுகிறது.

எனவே இந்த ஆபத்தான நிலைமையை தவிர்க்கும் முகமாக திருட்டு மின்சார தொடர்புகளை எடுப்பவர்களைத் தேடி கண்டுபிடித்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தும் நடவடிக்கைகளை பொலிஸாருடன் இணைந்து மின்சார சபையினர் யாழ்.குடாநாட்டில் ஆரம்பித்துள்ளனர். இதன் பிரகாரம் கடந்த இரு நாட்களில் 10 ஆம் மற்றும் 11 ஆம் திகதிகளில் மல்லாகம் நீதிமன்றத்தில் மட்டும் 17 பேர் ஆஜர் செய்யப்பட்டு ஒவ்வொருவருக்கும் தலா 18 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்லாது ஏனைய நீதிமன்றங்களிலும் இவ்வாறான குற்றச்சாட்டின் பேரில் பலருக்கும் இதை விட அதிகமான தண்டப்பணங்களும் விதிக்கப்பட்டிருக்கின்றன. இந்த வருடத்தில் மட்டும் திருட்டு மின்சார விவகாரத்தில் அகப்பட்டு நீதிமன்றத்தில் 200 இற்கும் அதிகமானவர்களுக்கு தண்டப்பணம் விதிக்கப்பட்டிருப்பதாக சுன்னாகம் மின் பாவனையாளர் சேவை நிலைய உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

முன்னர் இவ்வாறான சம்பவங்கள் அகப்படும் போது இணைப்புகளை மட்டும் துண்டித்து விட்டு திரும்பி விடுகின்ற போதும் பின்னர் திருட்டு மின்சார இணைப்புகளை அதிகரிக்கத் தொடங்கியதன் காரணமாகவே அதிலிருந்து மக்களைத் தடுக்கும் முகமாக சம்பந்தப்பட்டவர்களை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யும் நடவடிக்கைகளை ஆரம்பிக்க நேர்ந்ததாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

பொதுவாக சட்டபூர்வமாக வீட்டுக்கு மின் இணைப்பைப் பெறுவதென்றால் மின் கம்பத்திலிருந்து ஒரு மீற்றர் தூரத்திலுள்ள இருப்பிடமென்றால் 4722 ரூபா, 10 மீற்றர் தூரத்திற்கு 7620 ரூபா, 20 மீற்றர் தூரத்திற்கு 10,840 ரூபா, 30 மீற்றர் தூரத்திற்கு 14, 060 ரூபா, 40 மீற்றர் தூரத்திற்கு 17,280 ரூபா என்பதன் அடிப்படையில் மின் கம்பத்திற்கும் இருப்பிடத்துக்கும் இடையிலான தூரத்திற்கு அமைய இணைப்புக் கட்டணம் அறவிடப்படுகிறது.

இந்த நிலையில் திருட்டு மின்சாரம் இணைப்பை எடுத்து அகப்பட்டு 18 ஆயிரம் தண்டப்பணம் செலுத்துவதை விட அதை விட குறைவான தொகைக்கு சட்டபூர்வமான மின் இணைப்பைப் பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன், குறைந்தபட்ச மின் கட்டணம் மாதமொன்றிற்கு 30 ரூபாவாக இருக்கும் நிலையில் சக்தி விரயத்தைத் தடுக்கும் 2 அல்லது 3 மின் குமிழ்களைப் பாவித்தால் மாதாந்தம் 60 ரூபா மின்கட்டணத்துடன் கட்டுப்படுத்திக் கொள்ள முடியுமென்றும் சுட்டிக் காட்டப்படுகிறது.

எனினும், சிலர் திருட்டு மின்சாரத்தை எடுத்து அதில் தொலைக்காட்சிகளைக் கூட பாவித்து வருவதாகவும் குடாநாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன. திருட்டு மின்சாரம் மூலம் தொலைக்காட்சி உள்ளிட்ட பல்வேறு வசதிகளை அனுபவிப்பவர்களுக்கு ஏன் சட்டபூர்வமான மின் இணைப்பைத் தத்தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குக் கூட பெறமுடியாதுள்ளது என கேள்வி எழுப்பப்படுகிறது.

திருட்டு மின்சாரம் சட்ட விரோதமாக இருக்கும் நிலையில் அந்த இணைப்புகள் பெறப்படும் முறையானது மிகவும் ஆபத்தானதாக இருக்கிறது. இதுவே மரணங்களுக்கும் காரணமாக அமைந்து விடுகின்றன. திருட்டு மின்சாரத்தைப் பெறுவதற்குப் பெரும்பாலானவர்கள் பழைய வயர்களையே பயன்படுத்துவதாக குடாநாட்டு மின்சாரத்துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இதன் மூலம் மின் கசிவு ஏற்படும்.

அது மட்டுமல்லாது முட்கம்பிகளைக் கொண்டும் திருட்டு மின்சாரம் பெறப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. முட்கம்பிகளை பிரதான மின் விநியோக கம்பியில் தொடுத்து அந்த முட்கம்பியிலிருந்து பிறிதொரு வயரை இணைத்து மின்சாரம் பெறப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இது மிகவும் ஆபத்தானது என்று மின்சாரத் துறையினர் சுட்டிக் காட்டுகின்றனர்.

இதேநேரம், பிரதான மின் விநியோகத்தில் இருந்து திருட்டு மின்சாரம் எடுக்கப்படும் போது உயிர் கம்பி இணைப்பு மட்டும் பாவனைக்கு எடுக்கப்பட்டு நொதுமற் கம்பி இணைப்பானது நிலத்தில் புதைக்கப்பட்டோ அல்லது கிணற்றுக்குள் போடப்பட்டோ விடுவதாக சுட்டிக் காட்டப்படுகிறது.இது பிரதான மின் விநியோகத்திற்கு பெரும் பாதிப்பான விடயமென்று மின்சாரத்துறையினர் கூறுகின்றனர். அது மட்டுமல்லாது ஈரலிப்பான நிலமாக இருந்து அதில் உயிர்க்கம்பி போடப்பட்டு விட்டால் அந்நிலப் பிரதேசத்திலும் நீர் நிலைகளிலும் மின்சாரம் பாயக்கூடிய அபாயமும் இருக்கிறது.

ஒரு மின்சார விநியோகத் தொகுதிக்குள் தேவைக்கேற்ற அளவிலான மின்னோட்டங்களே விநியோகம் செய்யப்படுகின்ற நிலையில், திருட்டு மின்சாரத்தால் சுமை அதிகரிக்கும் போது அத் தொகுதி முழுவதும் மின் விநியோகம் தடைப்பட்டு விடுகிறது. இது சட்டபூர்வமாக மின்சாரத்தைப் பெற்றிருக்கும் மக்களுக்குச் சிரமத்தை ஏற்படுத்தி விடுகிறது.

எனவே, திருட்டு மின்சாரத்தின் மூலம் பல வசதிகளை அனுபவிப்பவர்கள் சட்டபூர்வமான மின் இணைப்பைப் பெற்று ஆபத்தையும் ஏனையவர்களுக்கு ஏற்படக்கூடிய அசௌகரியங்களையும் தவிர்த்துக் கொள்ளலாம். எமது தேவைக்காக எடுக்கும் திருட்டு மின்சாரம் எம்மைச் சார்ந்தவர்களுக்கே ஆபத்தாக அமைந்து விடுவதை நாம் புறக்கணித்து விட முடியாது.

இருப்பினும் சிலர் வசதியின்மை காரணமாகவும் இவ்வாறான திருட்டு மின்சாரத்தை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இதை நாம் நியாயப்படுத்தவில்லை. எனினும், இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரத் தரப்பினர் கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில், மின்கம்பத்துக்கும் இருப்பிடத்துக்கும் இடையேயான தூரம் 110 மீற்றரை விட அதிகரிக்கும் போது இணைப்புக்கான கட்டணங்கள் அதிகரிக்கின்றன. 200 மீற்றர் தூரம் என்றால் சுமார் ஒரு இலட்சம் செலவிட வேண்டி வருமெனத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, மின் விநியோகத்துக்கான நிர்மாணப் பணிகளை யாழ். குடாநாட்டில் மேற்கொள்ள நிதி உள்ளிட்ட வசதிகளை வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் ஆளுந்தரப்பினரும் உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது அவசியம்.

**டிட்டோகுகன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலையற்ற பட்டதாரிகளின் உள்ளக் குமுறல்கள்



யாழ்.மாவட்டத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகளுக்கு எதிர்வரும் ஜனவரி 31 ஆம் திகதிக்குள் அரச நியமனங்கள் வழங்கப்படுமென்று மீண்டுமொரு தடவை கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த உறுதிமொழி வழங்கியிருக்கின்றார். ஜனாதிபதித் தேர்தல் நெருங்கி வருகின்ற நிலையில் ஆளும் கட்சியின் அமைச்சரால் இந்த உறுதிமொழி வழங்கப்பட்டிருக்கின்றது.

எமது நாட்டில் வேலையில்லாப் பட்டதாரிகளின் விவகாரமானது தொடர் கதையாகவே நீடித்துச் செல்கின்றது. பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறியவுடன் வேலைக்குச் சென்ற காலங்கள் போய், வேலைக்காக வீதியில் இறங்கிப் போராட வேண்டிய நிலைக்கு இவர்கள் தள்ளப்பட்டிருக்கின்றார்கள். அதிலும் குறிப்பாக யாழ்.மாவட்டப் பட்டதாரிகளின் நிலையானது மிகவும் பரிதாபகரமானதாகவே இருக்கின்றது.

யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் பதிவுகளின் படி யாழ்.மாவட்டத்தில் தற்போது 2 ஆயிரம் வரையான பட்டதாரிகள் வேலையில்லாப் பிரச்சினைக்கு உட்பட்டிருக்கிறார்கள். இவர்களில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய சிலரைத் தவிர ஏனையோர் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் தமது கற்கை நெறியை மேற்கொண்டு பட்டம் பெற்று வெளியேறியவர்களாவர். 2004,2005 ஆம் ஆண்டுகளில் நியமனம் வழங்கப்பட்டபோது தவறவிடப்பட்ட பட்டதாரிகளும் இன்றுவரை வேலையில்லாப் பட்டதாரிகளாகவே இருக்கின்றனர்.

33 வயதாகின்ற நிலையிலும் நான் இன்றுவரை வேலையற்ற பட்டதாரியாகவே இருக்கின்றேன்.

இனி வேலை கிடைத்து எப்படி எனது வாழ்க்கையை முன்னெடுப்பது என்பது தென்மராட்சியைச் சேர்ந்த ஒருவரின் உள்ளக் கிடக்கை.

‘இந்த மாதம் கிடைக்கும் அடுத்த மாதம் கிடைக்குமென்று எதிர்பார்த்துக்கொண்டே இருக்கிறேன். எப்ப வேலை தருவார்கள் என்று உறுதியாகச் சொன்னால் வெளியே ஒரு சின்ன நாட்டுக்கு என்றாலும் போட்டு வந்திருக்கலாம்’ இது மற்றொரு பட்டதாரியின் குமுறல்.

‘எனக்கு வீட்டில் ஏற்பட்டிருக்கிற கஷ்டத்தால் மிக்சர் கடையொன்றில் தான் வேலை செய்யிறன்’. ‘2007 ஆம் ஆண்டு பட்டதாரியாக வெளியேறியதிலிருந்து இன்றுவரை நான் மேசன் வேலைக்குத்தான் போறன்’ என்று மேற்கிளம்புகின்ற பட்டதாரிகளின் குரல்களுக்குள்ளிருந்து வேலையற்ற பட்டதாரி மாணவியொருவர் ‘நாலு வருடமாக நாங்கள் வேலையற்ற பட்டதாரிகளாக இருக்கிறம். சமூக ரீதியாக இது எங்களைக் கடுமையாகப் பாதிப்பிற்கு உள்ளாக்கியிருக்கிறது. பலர் தவறான முத்திரை குத்தப்படுகிறார்கள். நாங்கள் என்ன தொழிலெண்டாலும் செய்யலாம் என்ற இக்கட்டான சூழ்நிலைக்குள் எங்களைத் தள்ளியிருக்கிறது’ என்று கூறுகின்றார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள பட்டதாரிகள் அனைவரும் ஏதோவொரு வகையில் இவ்வாறான உள்ளக் குமுறல்களுடனேயே தமது வாழ்க்கையை நகர்த்துகின்றனர். தங்கள் தாய்,தந்தையரின் உழைப்பில் கல்வி கற்று அவர்களுக்கு உழைத்துக் கொடுக்க வேண்டிய வயதில் தொடர்ந்தும் அவர்களிலேயே தங்கிவாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலையிலேயே யாழ்.மாவட்டப் பட்டதாரிகள் இருக்கின்றனர்.

2005 ஆம் ஆண்டு போட்டிப் பரீட்சையின் மூலம் நாடளாவிய ரீதியில் 42 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டன. இதில் வடக்கு,கிழக்கு மாகாணங்களில் 4 ஆயிரம் பேருக்கு நியமனங்கள் கிடைத்தன. 1600 பேர் ஆசிரியர்களாகவும் 300 பேர் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்களாகவும் ஏனையோர் நிதியுதவியாளர்களாகவும் மேலும் பல துறைகளுக்கும் உள்வாங்கப்பட்டனர். இதற்குப் பின்னர் நாட்டில் ஒரே தடவையில் கூடியளவான பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்கப்படவில்லை. ஆனால், பல்கலைக்கழகங்களிலிருந்து வருடாந்தம் பட்டதாரிகள் வெளியேறிக் கொண்டே இருக்கின்றனர்.

2007 ஆம் ஆண்டு மட்டும் யாழ்.பல்கலைக்கழகத்திலிருந்து 169 விஞ்ஞானப் பட்டதாரிகள்,427 கலைப் பட்டதாரிகள் உட்பட அனைத்துப் பீடங்களிலிருந்தும் 1145 பட்டதாரிகள் வெளியேறினர். 2008 ஆம் ஆண்டும் அனைத்துப் பீடங்களிலிருந்தும் ஆயிரத்திற்கும் அதிகமான பட்டதாரிகள் வெளியேறியுள்ளனர். இந்த வருடத்திலும் (2009) ஆயிரத்துக்கும் அதிகமான பட்டதாரிகள் வெளியேறவுள்ளனர்.

இந்தப் பட்டதாரிகளில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய சிலர் யாழ்.குடாநாட்டிலியங்குகின்ற உள்ளூர், அரச சார்பற்ற நிறுவனங்களிலும் ஐ.நா. வின் கிளை நிறுவனங்களிலும் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுகின்றனர். ஏனைய ஆயிரக்கணக்கான பட்டதாரிகள் 25 தொடக்கம் 33 வயதைக் கடந்த நிலையிலும் இன்றும் பெற்றோரிலேயே தங்கி வாழ்கின்றனர்.

பெற்றோருடன் இருக்கின்றபோது நியமனங்கள் கிடைத்தாலே தங்கள் உழைப்பை தங்களைப் படிப்பித்துப் பெரியவர்களாக்கிய பெற்றோருக்குக் கொடுக்க முடியும். குடும்பம் என்று சென்ற பின்னர் அது சாத்தியப்படாமல் போகலாம். ‘எனது உழைப்பில் ஒரு பகுதியைப் பெற்றோருக்குக் கொடுப்பதற்கு என் கணவர் சம்மதிப்பாரா? கணவர் சம்மதித்தாலும் அவரின் உறவினர்கள் குற்றஞ்சொல்ல மாட்டார்களா? பெற்றோருடன் இருக்கும் போது அவர்களுக்கு உழைத்துக் கொடுக்க முடியவில்லையே என்ற கவலை என்னை வாட்டுகின்றது’ என்று ஒரு வேலையற்ற பட்டதாரிப் பெண் தனது கவலைகளை வெளிப்படுத்துகிறார்.

பொருளாதார நெருக்கடிகள் நிறைந்துள்ள இந்தச் சூழ்நிலையில் உரிய வயதில் நியமனங்கள் கிடைக்காமையால் திருமணம் பின்தள்ளப்படல், சமூக ஒதுக்கல், குற்றம் குறை கூறல் போன்ற பல்வேறு காரணங்களால் இந்தப் பட்டதாரிகள் மன ரீதியான வெறுப்பையும் விரக்தி நிலையையும் அடைந்தவர்களாகவே காணப்படுகின்றனர்.

இந்நிலையிலேயே கடந்த புதன்கிழமை கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த உட்பட மத்திய மாகாணக் கல்வியதிகாரிகள் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த நிலையில் யாழ்.மாவட்டப் பட்டதாரிகள் ஒருங்கிணைந்து யாழ்.மத்திய கல்லூரிக்கு முன்பாகக் கவனயீர்ப்பு நிகழ்வொன்றை நடத்தினர்.

ஆரம்பத்தில் நல்லூரர்க் கந்த சுவாமி ஆலய முன்றிலிலேயே இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால், அங்கு அமைச்சர் வருகை தரமாட்டார் என்பதை அறிந்த பட்டதாரிகள் எப்படியாவது அமைச்சரைச் சந்திக்க வேண்டும் என்பதற்காக கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாமல் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் சென்று கூடியிருந்தனர்.

பல்வேறு சிரமங்களுக்குப் பின்னர் அங்கு சென்று அவர்களின் மகஜரைப் பெற்றுக் கொண்ட கல்வியமைச்சர் எதிர்வரும் ஜனவரி மாதம் 31 ஆம் திகதிக்குள் அனைவருக்கும் நியமனங்கள் வழங்கப்படும் என்று உறுதியளித்தார். கால இடைவெளிக்கான காரணத்தை விளக்குகையில் தேர்தல் காலத்தில் சட்டப்படியான நியமனங்கள் எதனையும் வழங்க முடியாதென்றும் சமாளித்தார். மேலும், தற்போது முதற்தடவையாகத்தான் நான் உங்களைச் சந்திக்கிறேன் என்றும் தெரிவித்தார்.

அண்மையில் நடைபெற்ற யாழ்.மாநகர சபைத் தேர்தல் காலத்தில் யாழ்.மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பொதுக் கலந்துரையாடலின் போது இதே பட்டதாரிகளைச் சந்தித்து மகஜர் பெற்றுக்கொண்ட கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த ‘உங்களுக்கு விரைவாக நியமனங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்’ என்று தெரிவித்திருந்தார். ஆனால், ஐந்து மாதங்கள் கடந்த நிலையிலும் அது நடைமுறைப்படுத்தப்படாத நிலையில் கடந்த புதன்கிழமை மீண்டுமொரு உறுதிமொழியை அவர் வழங்கியிருக்கின்றார்.

ஜனவரி மாதம் 26 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது.வெற்றி பெறுபவர் சில தினங்களின் பின்னரே ஜனாதிபதியாகப் பதவிப்பிரமாணம் செய்து கொள்வார். இந்நிலையில் ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் நியமனங்கள் வழங்கப்படும் என்று அமைச்சர் வழங்கிய உறுதிமொழியானது எந்தளவு சாத்தியமானதென்பது கேள்விக் குறியாகவே உள்ளது.

# வாக்குறுதிகளை மட்டும் வாரி வழங்கும் அமைச்சர்கள்




தேர்தல் நெருங்குகின்ற வேளையில் இன்னும் பல அமைச்சர்கள் தென்னிலங்கையிலிருந்து பிரசாரத்திற்காக யாழ்ப்பாணத்திற்கு வருவார்கள். அவர்களில் சிலர் இங்கு முகாமிட்டுத் தங்கியிருந்து கூடப் பிரசாரங்களை மேற்கொள்வர். இதன்போது பல உறுதிமொழிகள் அள்ளி வீசப்படும்.

ஆனால், யாழ்.மாவட்டத்திலிருக்கின்ற 2 ஆயிரத்திற்கு மேற்பட்ட பட்டதாரிகளையும் அவர்களின் பெற்றோர், சகோதரர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் போன்றோரையும் உள்ளடக்கியே குடாநாட்டு வாக்கு வங்கி இருக்கிறது. அவர்களுக்கு உறுதிமொழிகளை வழங்குகின்ற அரசியல்வாதிகள் இந்த விடயங்களை உணர்ந்து கொள்ள வேண்டும்.

என்.பிருந்தாபன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குடும்பச் சண்டைக்கும் சிறுவர்களின் தலைவலிக்கும் என்ன தொடர்பு?

பெற்றோர்களே உங்கள் இளம் பிள்ளைகள் அடிக்கடி தலைவலி ஏற்படுவதாக முறையிடுகிறார்கள் என்றால், அவர்களை டாக்டரிடம் கூட்டிச் சென்று சிகிச்சையளிப்பதுடன் உங்கள் காரியம் முடிந்துவிடுகிறது என்று நினைத்துவிடாதீர்கள். உங்களுக்குள் நீங்கள் அடிக்கடி சண்டை பிடித்துக் கொள்கிறீர்களா என்பதையும் ஒரு கணம் சிந்தித்துப்பாருங்கள்.

குடும்பச் சண்டைகளும் ஓய்வு நேரமின்மையும் சிறுவர்களுக்கு அடிக்கடி தலைவலி ஏற்படுவதற்குக் காரணமாயிருப்பதாக அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட புதிய ஆய்வொன்றின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

உலகம் பூராவுமுள்ள சிறுவர்களில் 30 சதவீதமானவர்கள் வாரத்தில் குறைந்தது ஒருதடவையேனும் தலைவலியினால் பாதிக்கப்படுவதாக அமெரிக்காவின் ஓஹியோ மாநிலத்தில் உள்ள கிளீவ்லாண்ட் கிளினிக் உரிமையாளரான ஜெனிபர் காஸ்மானும் அவருடன் சேர்ந்து ஆய்வை மேற்கொண்டவர்களும் தெரிவித்திருக்கிறார்கள்.

'சிறுவர்கள், வளரிளம் பருவத்தினர் – தலைவலி' என்ற தலைப்பில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. 2003 ஆம் ஆண்டு தொடக்கம் 2006 ஆம் ஆண்டுவரை 4 வருடங்கள் சிறுவர்கள் மத்தியிலான தலைவலி நோய் தொடர்பாக திரட்டப்பட்ட தகவல்களே ஆய்வுக்கு அடிப்படையாகப் பயன்படுத்தப்பட்டன.

சிறுவர்களின் குடும்பங்களில் தாய், தந்தையருக்கு இடையிலான உறவுநிலை, சிறுவர்களுக்குக் கிடைக்கக் கூடியதாக இருக்கும் பொழுதுபோக்கு நேரம் ஆகியவையே பிரதான மாக அவதானிக்கப்பட்டன.

குடும்பத்தில் தாய், தந்தையருக்கிடையே அல்லது சகோதரர்களுக்கிடையே வாராந்தம் ஒருதடவை அல்லது அதற்கும் கூடுதலாக தகராறு மூளும்பட்சத்தில் அந்தக் குடும்பத்தில் இருக்கும் பையன்கள் ஏனைய குடும்பங்களின் பையன்களைவிடவும் 1.8 மடங்கு தலைவலியினால் பாதிக்கப்படக்கூடிய ஆபத்தைக் கொண்டிருக்கிறார்கள்.

சிறுவர்கள் தங்களுக்கு தலைவலி ஏற்படுவதாக முறையிடும் போது பெற்றோர் எந்தவகையில் தங்கள் பிரதிபலிப்பை வெளிக்காட்டுகிறார்கள் என்பது முக்கியமான ஒரு அம்சமாகும்.

பெற்றோர்களினால் வெளிக்காட்டப்படக் கூடிய பிரதிபலிப்புகள் சிறுமிகளுக்கு எந்தளவு கால இடைவெளியில் தலைவலி ஏற்படுகிறது என்பதைக் தீர்மானிக்கும் ஒரு காரணியாக இருக்கிறது.

தலைவலி என்று முறையிடும் போது அரவணைத்து ஆறுதல் மொழி பேசி பின்னர் டாக்டர்களிடம் அழைத்துச் செல்லும் பழக்கத்தைக் கொண்டிருக்காத பெற்றோர்களின் பிள்ளைகள் மற்றைய குடும்பப் பிள்ளைகளை விட அடிக்கடி தலைவலியினால் பாதிக்கப்படக் கூடிய ஆபத்தை 25 சதவீதம் கூடுதலாகக் கொண்டிருக்கிறார்கள். எவ்வளவு கால இடைவெளியில் பிள்ளைகளுக்கு தலைவலி வருகிறது என்பது ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே கடுமையாக வேறுபடுகிறது என்றும் ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடபகுதியிலும் விஸ்வரூபமெடுக்கும்

# டெங்கு

கடந்த நூற்றாண்டினைக் காட்டிலும் தற்போது தொற்று நோய்கள் சுகாதாரத் துறையினரால் கட்டுப்படுத்தப் பட்டிருக்கின்ற போதும் இன்னும் பல தொற்றுநோய்கள் சவாலாகவே திகழ்கின்றன. இன்றைய நாட்களில் ஆசியா, ஆபிரிக்கா போன்ற அயனமண்டல நாடுகளில் நுளம்பினால் பரப்பப்படும் தொற்றுநோய்கள் ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கானோரை பலியெடுத்து வருகின்றது.

மலேரியா நோயானது கடந்த சில வருடங்களுக்கு முன்னர் வரை இலங்கையின் வடபகுதியை பொறுத்தவரை பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது. தற்போது இந்நோய் வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்ற போதிலும் நுளம்பினால் பரப்பப்படும் இன்னொரு நோயான டெங்கு மிகுந்த சவாலாக உருவெடுத்திருக்கின்றது.

இதுநாள்வரை பெருமளவு தாக்கத்தினை நாட்டின் தென்பகுதியில் குறிப்பாக கொழும்பையும் சூழவுள்ள புறநகர் பகுதிகளிலும் ஏற்படுத்தியிருந்த டெங்கு நோயானது அண்மைய நாட்களில் மிக வேகமாக வடபகுதியிலும் பரவி வருகின்றது.

வடபகுதியில் வவுனியா, யாழ்ப்பாணம் மாவட்டங்களில் இந்நோயின் தாக்கம் கடந்த நவம்பர் மாதத்தில் ஏனைய மாதங்களிலும் மிக அதிகளவிலானது என வைத்தியசாலைப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. தென்பகுதியுடனான போக்குவரத்து தொடர்புகள் அதிகரித்தமையும் வடகீழ் பருவமழையை அடுத்து நுளம்பு பெருக்கம் வேகமாக அதிகரித்து வருகின்றமையும் பிரதான காரணங்களாக விளங்குகின்றன.

சுகாதார அமைச்சினுடைய தொற்றுநோயியல் பிரிவின் தகவல்படி நவம்பர் வரையான இந்தாண்டில் மட்டும் 29513 பேர் டெங்கு நோய் தொற்றுக்குட்பட்டுள்ளனர். அத்தோடு 277 பேர் இந்த நோயிற்கு பலியாகியும் உள்ளனர்.

ஆதலினால் இந்த நோயைப் பற்றிய அறிவும் சூழல் பற்றிய விழிப்புணர்வும் முக்கியமாக தேவைப்படுகின்றது. நோயைப் பற்றிய அறிவு தகுந்த சிகிச்சையை பெற்று அநாவசியமான இழப்புகளைத் தடுக்க அத்தியாவசியமானது.

டெங்கு நோயானது வைரஸ் தொற்றுக் குட்பட்ட ஏடிஸ் வகை நுளம்புகள் கடித்து ஏறத்தாழ 5-6 நாட்களின் பின்னர் குணங்குறிகளாக வெளிப்படுகின்றது. சாதாரண டெங்கு காய்ச்சலாகவோ *(Classical Dengue fever)*, குருதிப் பெருக்குடனான டெங்கு காய்ச்சலாகவோ *(Dengue haemorragic fever)*, டெங்கு அதிர்ச்சி நிலையாகவோ *(Dengue shock synfrome)* குணங்குறிகள் வெளிப்படலாம். சிலவேளைகளில் குணங்குறிகள் வெளிப்படாமலும் இருக்கலாம்.

சாதாரண டெங்கு காய்ச்சலானது *(Classical dengue fever)* சடுதியான காய்ச்சலுடன் கூடிய சோம்பல், தலையிடி, கண்ணின் பிற்புறமான நோவு, கண் சிவந்திருத்தல், கடுமையான நாரி உளைவு, தசை, மூட்டுக்கள் என்பற்றில் நோ என்பனவற்றைக் கொண்டிருக்கும். இவற்றில் மேலதிகமாக முரசினால் இரத்தம் கசிதல், மூக்கினால் குருதி வடிதல், மலத்துடன் இரத்தம் போதல், தோலிற்கு கீழான இரத்த தழும்புகள் தோன்றல், வயிறு வீங்குதல், மூச்சு எடுக்க சிரமப்படுதல் போன்ற குணங்குறிகளை குருதிப் பெருக்குடன் கூடிய டெங்கு காய்ச்சல் நோயாளிகள் கொண்டிருப்பர்.

இவ்வாறான குணங்குறிகளைச் கொண்டிருப்பவர்கள் உடனடியாக வைத்தியசாலை அணுகி சிகிச்சை பெறுதல் உடலின் நீர்த்தன்மை பேணும் பொருட்டு அதிகளவு நீராகாரங்களை உள்ளெடுத்தலும் அவசியமானதாகும்.

நுளம்பினால் பெருகும் நோய்களை பொறுத்தவரையில் மிக மிக முக்கியமானது சமுதாய மட்டத்திலான விழிப்புணர்வாகும்.. ஏனெனில் நுளம்பின் பெருக்கமானது சூழல் பற்றிய சிந்தையின்றி மேற்கொள்ளும் நடவடிக்கைகளாலும் சுற்றாடல் சுத்தத்தில் காட்டும் அலட்சியத்தினாலுமே ஏற்படுகின்றது. குறிப்பாக டெங்கு நோயை பரப்பும் ஏடிஸ் *(Aedes)* வகை நுளம்புகள் தேங்கி நிற்கின்ற சூரிய வெளிச்சமற்ற நீர்ப்பரப்புகளிலேயே இனம் பெருகுகின்றன. இவ்வாறான வாய்ப்புகளை எமது வீட்டுச்சுற்றாடல், பொதுஇடங்கள், பெருந்தெருக்கள், தொழிற்பேட்டைகள் போன்றவற்றில் இல்லாது செய்தல் அத்தியாவசியமானதாகும்.

இதற்கு சாதாரண குடிமகன் தொடக்கம் அரசாங்கம் வரை பங்களிப்புத் தேவைப்படுகின்றது. ஒவ்வொரு குடிமகனும் தனது வீட்டுச் சுற்றாடலை சுத்தமாக பேண வேண்டியது கடமையாகும். இதனுடைய இன்றியமையாத்தன்மை சமூக அமைப்புகளால் பரப்புரை செய்யப்படவேண்டும்.

பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் பொது இடங்களில் நுளம்பு பெருகும் வாய்ப்புகளை இல்லாது செய்வதற்கும் சுகாதாரத் துறையினரும் பொதுநிர்வாகத் துறையினரும் இணைந்த ஒரு பொறிமுறை ரீதியான ஒரு செயற்றிட்டத்தை முன்னெடுத்தல் வேண்டும். அதிலும் குறிப்பாக சுகாதாரத்துறையினரின் ஆளணிப் பற்றாக்குறை நில்வுகின்ற வடபகுதி மாவட்டங்களில் இத்தகைய தேவைப்பாடு அத்தியாவசியமானது. அத்தோடு நுளம்பு ஒழிப்பு செயற்றிட்டத்தில் தனியார் துறையினரை வர்த்தக ரீதியாக ஈடுபடுத்துவதன் வாயிலாக வினைத்திறனைக் கூட்ட



முடியும். இதற்கு விவசாய, விஞ்ஞானத்துறையினரை நிபுணத்துவ ஆலோசகர்களாக உள்வாங்க முடியும். இன்றைய நவீன உலக வழக்கில் அரச துறையினர் இதனை சிந்தித்து செயற்படுத்துவார்களேயானால் நுளம்பு ஒழிப்பினை வெற்றிகரமான பாதையில் நகர்த்தக் கூடியதாக இருக்கலாம்.

2006 ஆம் ஆண்டு சிக்கன்குனியா நோய் யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்திய பாதிப்பு அளப்பெரியது. அத்தகைய நிலை டெங்கினால் ஏற்படாமல் தடுக்கவெண்டுமெனில் சகல பிரதேச மக்களிடமும் சுகாதார, பொது நிர்வாகத்துறையினருடன் இணைந்து தொண்டு நிறுவனங்களும் தடுப்பு முறைகளில் பங்கு பெற வேண்டும். மேலும் பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள் போன்றவற்றில் அதிகளவில் பகல் வேளைகளில் மாணவர்கள் ஒன்று கூடுகின்றனர். ஏடிஸ் நுளம்புகள் பகலிலேயே கடிப்பதால் இச்சூழல் நுளம்பு பெருகும் வாய்ப்பற்றதாக செய்யப்படுதல் வேண்டும். இதற்கு பொது சுகாதார பரிசோதகர்கள் பாடசாலை சுகாதார மன்றங்களின் ஊடாக விசேட செயற்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தலாம்.

நுளம்பு பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் யாழ்ப்பாணத்தில் மிகவும் சவாலாக இருக்கும் விடயங்களில் ஒன்று அண்மைய உள்ளக, வெளியக இடம்பெயர்வுகளால் அதிகரித்துவிட்ட கைவிடப்பட்ட காணிகளும் அவற்றிலுள்ள பற்றைகளுமாகும், இவற்றை துப்புரவு செய்வதில் உள்ளூர் அரச அதிகார பீடங்களாகிய மாநகர சபை, நகரசபை, பிரதேசசபை போன்றன தங்களுடைய பங்களிப்புடன் தனியார் துறைகளையும். ஈடுபடுத்த முடியும். இதற்கான நிதியை அயலவர்களிடமிருந்து உரிமையாளர்கள், பராமரிப்பாளர்களிடமிருந்தும் அறவிடக்கூடிய ஏற்பாடொன்றை செய்து கொள்ளலாம்.

டெங்கு நோய் பரம்பலில் வவுனியா மாவட்டமும் இடம்பிடித்திருப்பது மிகவும் கவலை அளிக்கின்ற ஒரு விடயமாகும். ஏனெனின் இங்குள்ள இடம்பெயர்ந்த பெருமளவிலான மக்கள் பல்வேறு வகையான தொற்றுநோய்களிற்குட்பட்டு நொந்து நலிவுற்றுக் காணப்படுகின்றனர். இவர்களை டெங்கு நோயும் தாக்க தொடங்கியிருப்பது வேதனையானது. இம்மக்களின் நல்வாழ்வில் சம்பந்தப்பட்ட தரப்புகள் விரைந்து நடவடிக்கை எடுப்பதும் தொண்டு நிறுவனங்கள் நுளம்பு வலைகளை வழங்கி நோயாளிகளை தனிப்படுத்த உதவுவதும் அத்தியாவசியமானது.


இறுதியாக ஏடிஸ் நுளம்புகள் பகலில் கடிக்கின்ற உண்மையை விளங்கிக் கொண்டு அதன் காரணமாக நுளம்பு வலைகளையும் நுளம்பு கொல்லிகளையும் இரவில் உபயோகித்து பாதிப்பினை தடுத்துவிட முடியாது. ஆதலினால் நுளம்புபெருக்கத்தை இல்லாமல் செய்யும் நடவடிக்கைகளை நாம் ஒவ்வொருவரும் முடக்கிவிடுவதே டெங்கிலிருந்து பாதுகாப்பு பெறுதலுக்கான ஒரே மார்க்கமாகும்.

**டாக்டர் பி.நந்தக்குமார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிற்பக் கலைஞருடன் ஒரு சந்திப்பு...



**யா**ழ்.குடாநாட்டில் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் என நான்கு பெரும் பிரதேசங்களிலும் ஆலய இராஜகோபுர நிர்மாணப் பணியில் ஈடுபட்டு அனைவராலும் அறியப்பட்ட ஒரு பிரபல சிற்பாச்சாரியார் தான் வேலுப்பிள்ளை யோகேஸ்வரன்.

அண்மையில் அவரைச் சந்தித்தபோது அவர் **Saturday** மெயிலுக்கு வழங்கிய பேட்டியின் விபரம்:

**கேள்வி: உங்களைப் பற்றி...?**

**பதில்:** எனது பெயர் வேலுப்பிள்ளை யோகேஸ்வரன், ஊர் அராலி மத்தி, ஆரம்பக் கல்வி பயின்றது அராலி மத்தி முருகமூர்த்தி வித்தியாலயம். அடுத்து அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம். ஆசைக்கொன்று ஆஸ்திக் கொன்றென்று சொல்வது போன்று இரு குழந்தைகள். அன்பான மனைவி. இதுவே எனது குடும்பம். நான் தற்போது கோபுர நிர்மாண சிற்பாச்சாரியாக இருக்கிறேன். யாழ். மாவட்டத்திலும் வெளி மாவட்டங்களிலும் பல ஆலயங்களில் எனது கலைப்படைப்புகளைக் காண முடியும்.

**கேள்வி: உங்கள் சிற்பக்கலை உலகப் பிரவேசம் எப்போது ஆரம்பித்தது?**

**பதில்:** எனது சிற்பக்கலை உலகப் பிரவேசம் 1970 ஆம் ஆண்டு ஆரம்பமாகியது. அன்று முதல் கலைக்காகவே என்னை அர்ப்பணித்து தொழில்புரிந்து வருகின்றேன். தம்பிராஜா என்பவர்தான் எனது முதற்குருநாதர். அவரது வழிகாட்டலில் எனது பயணம் தொடர்கிறது. அந்த வகையில் யாழ்.குடாநாடு உட்பட நாட்டின் பல இடங்களிலும் பல்வேறு ஆலயங்களிலும் பல கோபுரங்களை நிர்மாணித்துள்ளேன். தற்போதும் நிர்மாணித்து வருகின்றேன்.

**கேள்வி: யாழ்.குடாநாடு தவிர்ந்த நாட்டின் ஏனைய மாவட்டங்களில் உங்கள் கலைப்பணி குறித்துக் கூறுங்களேன்?**

**பதில்:** யாழ்.குடாநாட்டில் தான் அதிகளவான கோபுரங்களை நிர்மாணித்திருக்கின்றேன்.



யாழ். குடாநாட்டில் மட்டுமன்றி, புலம்பெயர் வாழ் தமிழர் தேசங்களிலும் பிரபலம் பெற்ற ஆலயங்கள் உட்பட பல ஆலயங்களில் எனது கோபுரப்பணி இடம்பெற்றிருக்கின்றது. அந்த வகையில் வல்வெட்டித்துறை ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலயம், வளகம்பரை ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலயம், பருத்தித்துறை சவாணார் ஓடை ஒழுங்கை ஸ்ரீமகாமாரியம்பாள் ஆலயம், சுழிபுரம் ஓடை யம்பதி ஸ்ரீபாலாம்பிகா சமேத ஸ்ரீவைத்தீஸ்வரர் தேவஸ்தானம், பலாலி ஆசிரியர் கலாசாலை, ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயம், அராலி மேற்கு ஹரிஹரபுத்திர ஐயனார் தேவஸ்தானம், கரணவாய்-கொற்றாவத்தை ஞானவைரவர் தேவஸ்தானம், கரணவாய் வடக்கு பூத விநாயகர் ஆலயம், பொலிகண்டி நீர்வளப் பிள்ளையார் ஆலயம், கொற்றாவத்தைப் பிள்ளையார் ஆலயம், கைதடி பிள்ளையார் ஆலயம், நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலயம், நீர்வேலி ஸ்ரீ கந்தசுவாமி ஆலயம், கைதடி ஸ்ரீ கந்தசுவாமி ஆலயம், தும்பளை முருகமூர்த்தி ஆலயம், காரை நகர்-தங்கோடை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம், பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம், வட்டுக்கோட்டை தெக்கணம்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயம் உட்பட இன்னும் பல ஆலயங்களில் எனது கோபுர நிர்மாண வேலைகளும் பரிவாரக் கோயில்கள் மற்றும் பரிவாரத் தெய்வங்களின் கலைப்படைப்புகளும் பொதிந்துகிடக்கின்றன.

**கேள்வி: யாழ். குடாநாடு தவிர்ந்த நாட்டின் ஏனைய மாவட்டங்களில் உள்ள ஆலயங்களில் உங்களின் கலைப்பணி குறித்துக் கூறுங்களேன்?**

**பதில்:** யாழ்.குடாநாடு தவிர்ந்த நாட்டின் ஏனைய மாவட்டங்களில் எனது கோபுர நிர்மாணப் பணிகள் எனும்போது யாழ்ப்பாணத்துக்கு மிக அண்மையிலுள்ள கிளிநொச்சி-சேத்துக்கண்டி முத்துமாரி அம்மன் ஆலயம், மட்டக்களப்பு-ஏறாவூர் பிள்ளையார் ஆலயம், கண்டி-கிக்கடுவ கண்டி ஆலயம், கண்டி கெங்கல்ஸ அருளானந்த விநாயகர் ஆலயம், கண்டி மகியாவ ஸ்ரீ காட்டு மாரியம்மன் ஆலயம் உட்பட இன்னும் பல ஆலயங்களிலும் கோபுர நிர்மாண வேலைகளையும் ஏனைய கலை நிர்மாண வேலைகளையும் செய்திருக்கின்றேன்.

**கேள்வி: கலை உலக வாழ்வில் இது வரை நீங்கள் பெற்ற விருதுகள் குறித்து...?**

**பதில்:** பல ஆலயங்களிலும் பல விருதுகள் கிடைத்திருக்கின்றன. குறிப்பாக நீர்வேலி ஸ்ரீ கந்தசுவாமி கோயிலில் 'சிற்ப சிந்தாமணி' கைதடி கந்தசுவாமி கோயிலில் 'சிற்பயோக சிந்தாமணி' நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலயத்தில் 'சிற்பக்கலாவாரிதி' உள்ளிட்ட இன்னும் பல விருதுகளும் விருதுப் பெயர்களும் கிடைத்திருக்கின்றன.

**கேள்வி: இந்தியா போன்ற நாடுகளுக்கு சென்று சிற்பவேலைகளில் ஈடுபட்டமை மற்றும் இந்தியச் சிற்பக்கலைஞர்களுடன் இணைந்து பணியாற்றிய அனுபவங்கள் உண்டா..?**

**பதில்:** இந்தியா சென்று சிற்பக்கலை வேலைகளில் ஈடுபடவில்லை. ஆயினும் இந்தியக் கலைஞர்கள் பலருடன் இணைந்து பணியாற்றிய தேவையேற்படும் பொழுது அவர்களை யாழ்ப்பாணம் அழைப்பித்து பணிக்கமர்த்தி பல ஆலயங்களில் கோபுர நிர்மாணப்பணிகளை மேற்கொண்டிருந்த அனுபவங்கள் உண்டு.

**செ.சக்திதாசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரக்கறி வகைகளைச் சாப்பிட்டு மனிதகுலத்தைக் காப்பாற்றுவோம்



காலநிலை மாற்றத்தின் விளைவாக உலகில் ஏற்படப்போகின்ற அனர்த்தங்களைத் தணிப்பதற்கான வழிவகைகளை ஆராய்வதற்காக டென்மார்க் தலைநகர் கொபன்ஹேகனில் 192 நாடுகளின் பிரதிநிதிகள் தற்போது கூடியிருக்கிறார்கள்.

ஐக்கிய நாடுகள் சபையின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த மகாநாட்டில் காலநிலை மாற்றத்துக்குக் காரணமான பசுமை இல்லத்தாக்க வாயுக்களைக் குறிப்பாக காபனீரொட்சைட்டை வெளியிடுவதைக் குறைத்துக்கொள்வதற்கான வழிவகைகள் தொடர்பில் நாடுகளின் தலைவர்கள் இணங்கிக் கொள்ள வேண்டும் என்றும் மனித குலத்தை ஆபத்தில் இருந்து காப்பாற்றுவதற்கு குறுகிய நோக்கங்களைவிடுத்து தூரநோக்குடன் செயற்படவேண்டுமென்றும் உலக மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

இத்தகைய மகாநாடு ஒருபுறமிருக்க, மக்களும் தங்கள் சொந்தத்தில் காபனீரொட்சைட்டை வெளியிடும் அளவைக் குறைப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய வழிவகைகள் குறித்தும் ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுவருகின்றன.

இந்த ஆலோசனைகளில் ஒன்று மக்கள் இறைச்சி வகைகளைச் சாப்பிடுவதைக் குறைத்து மரக்கறிவகைகளில் நாட்டம் காட்டவேண்டும் என்பதாகும்.

மனிதன் இந்தப் புவிக்கு நன்மை செய்ய விரும்பினால், அவர் சைவ உணவுக்கு மாறுவதன் மூலம் அதைச் செய்ய முடியும். அண்மையில் இந்திய மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் குறிப்பிடுகையில், 'மாட்டிறைச்சி சாப்பிடுவதை நிறுத்துவதன் மூலம் புவிவெப்பத்தைக் குறைக்கலாம்' என்று கூறிய கருத்து உண்மையே, இதை நோபல் பரிசு பெற்றவரும் ஐக்கிய நாடுகளின் ஒரு பிரிவாகிய பருவ நிலை மாற்றத்துக்கான சர்வதேச அமைப்பின் தலைவர் ராஜேந்தர் கே.பச்செரி பல கருத்தரங்குகளில் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்.

ஒரு கிலோ மாட்டிறைச்சியைத் தவிர்ப்பதன் மூலம் வளிமண்டலத்தில் 36.4 கிலோ கரியமில வாயு கலப்பதைத் தவிர்க்க முடியும் என்று அவர் சொல்வது வெறும் புள்ளிவிபரம் அல்ல. நடைமுறை வாழ்க்கைக்கு சாத்தியமானதும் கூட. ஆடு, மாடுகள் வளர்ப்பதற்காக அழிபடும் காடுகள், இறைச்சியை வேறு இடங்களுக்குக் கொண்டு செல்வதற்கான வாகனப் போக்குவரத்து, இறைச்சியைக் குளிர்பதனப் பெட்டியில் வைத்திருத்தல் போன்ற தொடர் நடவடிக்கையால் ஏற்படும் கரியமில வாயுவைக் கணக்கிட்டு இந்தக் கணக்கீடு செய்யப்படுகிறது.

இறைச்சிக் கடைகள் என்பது ஊருக்கு ஒரு சிலவாக இருந்த நாள்கள் என்பது முற்றிலுமாக மாறிப்போய், இப்போது எல்லா நாள்களிலும் எல்லா இடங்களிலும் தெருவுக்குத் தெரு இறைச்சிக் கடைகளும் பிரியாணிக் கடைகளும் இருப்பதைக் காண்கிறோம். 2006 ஆம் ஆண்டு உலகம் முழுவதும் 28 கோடி டன் இறைச்சி உணவுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு இருந்த அளவைக் காட்டிலும் 5 மடங்கு அதிகம்.

ஒரு ஹெக்டயர் நிலப்பரப்பில் வேளாண்மை செய்து உருவாக்கப்படும் காய்கறி, கனிகள், பருப்புவகைகள் மூலம் ஒரு ஆண்டுக்கு 30 பேருக்கு உணவளிக்க முடியும். ஆனால், இதே நிலப்பரப்பை கால்நடை வளர்ப்புக்குப் பயன்படுத்தி அதன் மூலம் கிடைக்கும் முட்டை, பால், இறைச்சி ஆகியவற்றின் மூலம் ஒரு ஆண்டுக்கு 10 பேருக்கு மட்டுமே உணவளிக்க முடியும் என்றும் கணக்கிடப்படுகிறது.

ஒரு கிலோ கிராம் மாட்டிறைச்சி பெறுவதற்கு 10 கிலோ கால்நடைத் தீவனம் தேவைப்படுகிறது. ஒரு கிலோ பன்றிக் கறிக்கு 5 கிலோ தானியமும் ஒரு கிலோ கோழிக் கறிக்கு 3 கிலோ தானியம் தேவையாக இருக்கிறது. ஆனால் இந்த தானியத்தைக் கொண்டு பல வேளை உணவை ஒரு மனிதன் உண்ண முடியும். மேலும், காய்கறி உணவைச் சமைக்கத் தேவைப்படும் எரிசக்தியைக் காட்டிலும் இறைச்சி உணவு தயாரிக்க 25 மடங்கு எரிசக்தி தேவையாக இருக்கிறது. இவை யாவற்றையும் கருத்தில் கொள்ளும்போது, ஒருவர் சைவ உணவுக்கு மாறுவது மண்ணுலகிற்கு மட்டுமல்ல, வளிமண்டலத்திற்கும் நன்மை செய்ய முடியும்.

சைவ உணவு மனிதருக்கு எளிமையான உணவு என்பதுடன், வளிமண்டலத்தை மாசுபடுத்தும் பசுமை இல்ல வாயுக்களில் கரியமில வாயுவைவிட 30 மடங்கும் அதிக தீமை விளைவிக்கும் மீத்தேன் வாயுவுக்கு இறைச்சி காரணமாக இருக்கிறது என்பதை எண்ணும் போது ஒவ்வொருவரும் மாமிச உணவைத் தவிர்ப்பதும் வசதிகளைக் குறைத்துக் கொண்டு எளிய வாழ்க்கை வாழ்வதும் அர்த்தமுள்ள வாழ்க்கையாக இருக்கும். மேலும், புவி வெப்பத்தைக் குறைத்து பருவநிலை மாற்றங்களைக் கட்டுக்குள் கொண்டுவரவும் உதவும். ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற அளவில் வளிமண்டலத்தைக் காப்பது என்று உறுதியை ஏற்றுக் கொண்டால், புவியைக் காக்கலாம். நாடு அதனளவில் பசுமை இல்ல வாயுக்களைக் குறைக்க முற்படும் போது குடிமகன்களாகிய நாமும் நம்மால் முடிந்த பங்களிப்பைச் செய்தால் என்ன!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள்



வடக்கு மக்களின் ஜீவனோபாயத்தொழில்களில் பிரதானமானதாக கடற்றொழிலும் விவசாயமுமே காணப்படுகின்றது. இத் தொழில்கள் மூலம் தன்னிறைவு பெற்று வாழ்ந்து வந்த அந்த மக்களின் வாழ்க்கையையே புரட்டிப்போட்ட யுத்தத்தின் பிடியிலிருந்து தற்போது அந்த மக்கள் சிறிது சிறிதாக மீண்டு வருகின்ற போதும் முன்னரைப் போன்று மீன்பிடித் தொழிலில் தன்னிறைவைக் காணமுடியாதளவுக்கு தடைகளும் பிரச்சினைகளும் இருக்கவே செய்கின்றன.

யுத்தம் முடிவடைந்த நிலையில் வடமாகாண கடற்றொழிலுக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதனால் தொழில் சுதந்திரம் பெற்ற மீனவர்களால் தாம் பிடித்து வரும் மீன்களை தென்னிலங்கைக்கு சந்தைப்படுத்த முடியாத நிலையில் உள்ளனர். விவசாய உற்பத்திப் பொருட்களை தென்னிலங்கையில் சந்தைப்படுத்தும் வாய்ப்புகளை ஓரளவுக்கு ஏற்படுத்திக் கொடுத்த அரசு கடலுணவுகளை சந்தைப்படுத்தும் வாய்ப்புகளை ஏற்படுத்தவில்லை.

அத்துடன் வடபகுதியில் மீன்களை பாதுகாப்பாக வைத்திருக்கக் கூடிய குளிரூட்டிகளோ, அல்லது அதற்கான ஏனைய வசதிவாய்ப்புகளோ, தேவையான அளவுக்கான ஐஸ்கட்டித் தொழிற்சாலைகளோ இல்லாத நிலையில் பெரும் போராட்டத்துக்கு மத்தியில் கடலுக்குச் சென்று பிடித்து வரும் மீன்களை உரிய விலைக்கு விற்க முடியாமலும் மீதமாகும் மீன்களை பாரிய குளிரூட்டிகளில் வைத்து பாதுகாக்க முடியாமலும் மீனவர்கள் அவதிப்படுகின்றனர்.

வடபகுதிக் கடலில் தற்போது பெருந்தொகையான மீன்கள் பிடிபடும் நிலையில் அவற்றை விற்கவும் முடியாமல், தென்னிலங்கைக்கு ஏற்றுமதி செய்யவும் முடியாமல், தமது பகுதிகளிலேயே பாதுகாத்து வைத்திருக்கவும் முடியாமல் அவதிப்படும் மீனவர்கள் இறுதியில் இவற்றைக் கருவாடு போட வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இதனால், அவர்கள் உரிய வருமானத்தைப் பெறமுடியாமல் உள்ளது.



தமது கடலுணவுகளை தென்னிலங்கையில் சந்தைப்படுத்தும் பிரச்சினை மட்டுமன்றி, வடக்கு கடல் பகுதிக்குள் ஊடுருவும் இந்திய மற்றும் தென்னிலங்கை மீனவர்களின் சவால்களையும் இவர்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இந்திய மீனவர்களின் ஊடுருவலை ஓரளவுக்கு கட்டுப்படுத்தும் இலங்கை கடற்படையினர் தென்னிலங்கை மீனவர் விடயத்தில் பாராமுகமாக உள்ளமை வடபகுதி மீனவர்களின் மீன்பிடித்தொழிலில் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

மீன்பிடித் தொழிலில் இலங்கையின் மொத்தத் தேவையில் 36 சதவீதத்தை பூர்த்தி செய்து வந்த வடமாகாணம், தற்போது தனது தேவையைக்கூட பூர்த்தி செய்ய முடியாதளவுக்கு 10 சதவீதத்திற்கு வீழ்ச்சிகண்டுள்ளது. நீண்டகாலப் போர், கடல்கோள் போன்றவற்றால் பெரும் அழிவுகளை சந்தித்த வடமாகாண மீனவர்கள் இனியாவது தமது வாழ்வில் விடிவெள்ளி தென்படுமா என எதிர்பார்க்கின்றனர்.

மாவட்ட மீன்பிடி தொழிலாளர் தொடர்பாக யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர் எஸ்.தவரட்ணம் தெரிவிக்கையில்;

'குடாநாட்டில் கடந்த ஒக்டோபர் மாதத்தின் கணக்குப்படி 17,800 பேர் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். என்றும் கடந்த ஓரிரு வாரங்களாக முகாம்களிலிருந்து மீள் குடியேற்றம் நடைபெற்றதன் மூலம் இரண்டாயிரத்திற்கும் அதிகமான மீனவர்கள் அதிகரித்துள்ளனர்.

இம் மீனவர்களின் நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணத்தில் கிராம மட்டமாக 117 மீனவச் சங்கங்கள் செயற்படுகின்றன. இச் சங்கங்கள் தனது சங்கத்திற்குட்பட்ட பகுதிகளிலுள்ள மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தீர்த்து அவர்களின் தொழில் மேம்பாட்டிற்கான திட்டங்களை மேற்கொண்டு வருகிறது.

யுத்தம் முடிவடைந்த நிலையில், தற்போது மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு, ஏனைய பகுதி மீனவர்களைப் போன்று மீன்பிடிப்பதற்கு வசதிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தும், பிடிக்கப்பட்ட மீன்வகைகளை ஏனைய பகுதிகளுக்கு சந்தைப்படுத்தி கூடியளவு இலாபமீட்டுவதற்கான வசதிகள் குறைவாகக் காணப்படுகிறது.

ஒரு நாளைக்கு மீன்பிடிப்பினால் 10 ஆயிரம் ரூபாவிற்கு மேற்பட்ட தொகையினை வருமானமீட்ட முடிகின்ற அதே வேளை, எவ்வித வருமானத்தையும் ஈட்ட முடியாத நிலையும் மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ளதாகவும்' கூறுகிறார்.


கடந்த சில மாதங்களுக்கு முன், மேல்மாகாண மீனவர்களுக்கு அரசு தடைவிதித்துள்ளது நியாயமற்ற செயலென அரசியல் வாதிகள் வாதிடுகின்ற இதேவேளை, வடக்கு, கிழக்கு பகுதிகளிலுள்ள மீனவர்களின் பிரச்சினைகளை வெளிச்சத்திற்கு கொணர்ந்து, தீர்த்து வைக்க பெரும் அக்கறைப்படவில்லை.

கடந்த 25 வருடங்களுக்கு மேலாக திறந்த வெளிச் சிறைக் கைதிகளாக மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட வடபகுதி மக்கள், யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில், தடை செய்யப்பட்ட பிரதேசம் என்று எதுவுமின்றி மீன்பிடிப்பதிலிருந்த கட்டுப்பாட்டை அரசு தளர்த்தியது போன்று தற்போது ஏ –9 வீதி திறக்கப்பட்டுள்ள நிலையில், பிடிக்கப்பட்ட மீன்களை தரைவழியாக ஏனைய பிரதேசங்களுக்கு சந்தைப்படுத்தும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து வாழ்வாதாரத்திற்காக போராடும் இந்த மீனவர்கள் சுதந்திரமாக செயற்படவும் அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

வடபகுதி மீனவர்களின் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்குரிய நல்லதொரு வாய்ப்பாக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தலைப் பயன்படுத்தக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால் இந்த மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் வாதிகள் இச்சந்தர்ப்பத்தை தவற விட்டுவிடக்கூடாது. இந்த மீனவர்களின் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதே தமது பிரதான பணியென ஒவ்வொரு அரசியல் வாதியும் உணர்ந்து செயற்பட வேண்டும்.

**எச்.ஹுஸ்னா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யானைத் தகவல்கள்

யானை வரும் பின்னே மணி யோசை வரும் முன்னே என்ற பழமொழி எல்லோரும் கேட்டிருப்பீர்கள். யானையைப் பற்றி சொல்வதற்கு இன்னும் ஏராளமான விடயங்கள் உள்ளன. அவற்றில் சில

யானையின் துதிக்கையில் எலும்புகள் இல்லை. (அடடா எலும்பு இல்லாமலேயே இவ்வளவு வலிமையா என்று வியப்பாக உள்ளதா)

யானைக்கு கிட்டப்பார்வை மட்டும் தான் உள்ளதாம்.

இந்தியப் பெண் யானைகளுக்குத் தான் தந்தம் கிடையாது. ஆனால், ஆபிரிக்க பெண் யானைகளுக்கு தந்தம் உள்ளது.

பொதுவாகவே பெண் யானைகளுக்கு மதம் பிடிப்பதே கிடையாதாம்.

யானைகளுக்கு என்று ஒரு மருத்துவமனை கேரளாவில் உள்ளது.

யானையின் இரண்டு தந்தங்களும் சம அளவில் இருப்பதில்லை.

யானைக்குட்டிக்கு 3 முதல் 5 வயதுக்குள் தந்தம் முளைக்கிறது.




## ஒரு வார்த்தையில் வழிகாட்டல்

பல தலைவர்களும் நம் முன்னோர்களும் பல விடயங்களை நமக்கு சொல்லிவிட்டு போயுள்ளனர். எனினும் இவை ஒரு வார்த்தையில் நல்வழியை தெளிவாக்குவதாகும்.

மறக்கக்கூடாதது –நன்றி
பிரியக்கூடாதது –நட்பு
உயர்வுக்கு வழி –உழைப்பு
மிக மிக நல்ல நாள் –இன்று
நழுவவிடக்கூடாதது– வாய்ப்பு
விலக்கவேண்டியது –விவாதம்
செய்யக்கூடியது –உதவி
செய்யக்கூடாதது – நம்பிக்கைத்துரோகம்
ஆபத்தை விளைவிப்பது –அதிகபேச்சு
நம்பக்கூடாதது– வதந்தி
கீழ்த்தரமான விடயம் –பொறாமை
மிகவும் கொடியநோய் –பேராசை
மிகப்பெரிய தேவை – சமயோசித புத்தி
மிகவும் வேண்டாதது –வெறுப்பு

## குறுக்கெழுத்துப்போட்டி - 11

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 4 | 5 |
| 6 | 7 | | 8 | 9 | 10 |
| | 11 | 12 | | 13 | |
| 14 | | 15 | 16 | | 17 |
| 18 | | 19 | 20 | | 21 |
| 22 | 23 | | 24 | 25 | 26 |

**இடமிருந்து வலம்**

1. காடும் காடு சார்ந்த இடமும்
4. துணிச்சலற்றவன்
6. இது குடியைக் கெடுக்கும் (திரும்பியுள்ளது)
8. மணம் என்றும் சொல்லலாம் (குழம்பியுள்ளது)
11. முக்கனிகளில் ஒன்று (திரும்பியுள்ளது)
15. அகங்காரத்தை குறிக்கும் (திரும்பியுள்ளது)
19. பெண் ஆடு (திரும்பியுள்ளது)
22. மருத்துவர்கள் இது பிடித்துப்பார்ப்பார்கள் (திரும்பியுள்ளது)
24. பீதி (திரும்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. வெட்ட வெட்ட முளைக்கும்
2. தொப்பி என்றும் சொல்லலாம் (குழம்பியுள்ளது)
4. விசனம் (குழம்பியுள்ளது)
5. குட்டிபோடும் மரம் (தலைகீழ்)
12. இலங்கையில் இந்தக் காய்ச்சல் பரவி வருகிறது
14. பாம்பு இதற்கு மயங்கும்
16. பெயர் என்றும் சொல்லலாம்
17. இது என்றால் பிணமும் வாய் திறக்குமாம் (தலைகீழ்)

பெயர் : ..............................

முகவரி : ..............................

..............................

### குறுக்கெழுத்துப்போட்டி - 09 விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. புகழ் | 1. புலி |
| 4. கூனி | 2. காகம் |
| 6. காலி | 4. கூதல் |
| 8. தசம் | 5. சனி |
| 11. வெல்லம் | 8. குலம் |
| 16. குறி | 12. வெற்றி |
| 19. காற்று | 15. காதணி |
| 22. கடா | 18. தோட்டா |
| 24. மணி | 20. மறு |
| 26. திட்டு | 22. கதி |

**250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**இ.கிருஷ்ணப்பிரியா**
புற்றளை வீதி,
புலோலி.

### பாராட்டுப்பெறுவோர்

01. ம.கஜகிருஸ்ணா
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

02. சி.வினித்திரா
கந்த உடையார் ஒழுங்கை,
பருத்தித்துறை.

03. பா.லூக்டிமெல்சன்
சின்னக்கடை வீதி, குருநகர்.

04. நா.சுந்தரலிங்கம்
தொட்டிலடி மத்தி,
சண்டிலிப்பாய்.

05. கி.யுலக்ஷினி
கல்வளை வீதி, சண்டிலிப்பாய்.

உங்கள் விடைகளை
**'Saturday மெயில்'**
**இல. 336, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்**
என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்...

## நாடுகளின் தேசிய மலர்கள்

* சீனா - திராட்சை மலர்
* ஜப்பான் - செவ்வந்திப்பூ
* இங்கிலாந்து - ரோஜா
* எகிப்து - தாமரை
* பிரான்ஸ் - லில்லி மலர்
* வங்கதேசம் - வெள்ளை அல்லி

## சில தகவல்கள்

★ மழைத்துளிகள் 8 முதல் 10 கி.மீற்றர் வேகத்தில் பூமியில் விழுகிறது.
★ பூமியை விட செவ்வாய் கிரகம் சிறியது
★ பாறைகளும் வருடத்திற்கு 1 மி.மீ. வரை வளரும்.
★ உலகில் நாட்டின் பெயரைக் குறிப்பிடாமல் தபால்தலை வெளியிடும் நாடு இங்கிலாந்து.
★ அவுஸ்திரேலியாவிலுள்ள கோலா கரடிகள் தண்ணீர் அருந்துவதில்லை. யூக்கலிப்டஸ் மரத்தின் பட்டைகளை மட்டுமே உண்ணும்.

★ நத்தை ஒரு மைல் தூரத்தைக் கடக்க சுமார் மூன்று வாரங்களாகும்.
★ விலங்குகளின் அரசன் என்று கூறப்படும் சிங்கத்தின் ஆயுள் 15 ஆண்டுகள்.
★ கரப்பான் பூச்சிகள் எப்போதும் சரியாக 16 முட்டைகளை இடுகின்றன.
★ கிளியின் மேல் அலகு கீல் போல மடியக்கூடியது. கீழ் அலகு அசையாமல் மேல் அலகை மட்டும் அவற்றால் அசைக்கமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவல் மரம்

முனைவர் தா.நீலகண்டபிள்ளை

இலக்கிய சுவை...

‘வினையே ஆடவர்க்கு உயிரே’ எனும் வாக்குக்கு இணங்க பழந்தமிழகத்தில் ஆடவர்கள் வினை ஆற்றலில் சிறந்து விளங்கினர். வினை என்பது போர் மற்றும் போர்க்களச் செயலை அடியொற்றி இருந்தது. அரசர்களும் போர்க்கள வேள்வியில் மானமுடனும் அறநெறி முறைப்படியும் செயல்பட்டனர். நாட்டையும் மக்களையும் காப்பாற்றுவதைத் தம் முதல் நோக்கமாக, கடமையாகக் கொண்டனர். தம் நாட்டு எல்லையில் நாட்டின் காவலாக,‘காவல் மரங்களை’ நட்டு வளர்த்துப் பாதுகாத்து வந்தனர். காவல் மரங்கள் அரசனின் மானத்தின் குறியீடாக அமைந்திருந்தன. காவல் மரத்தின் சிறப்புகளைப் பல நூல்கள் விதந்து உரைக்கின்றன.

காவல் மரம் என்பது மன்னர்களின் தலைநகரில் வீரத்தின் அறிகுறியாய் விளங்கியவை. இம்மரங்கள் அரசர்களாலும் அவர்தம் வீரர்களாலும் காக்கப்பட்டன. இதனை அரசனின் அடையாள மரமாகவும் வீரத்தின் அறிகுறியாகவும் போற்றி அதற்குத் தீங்கு வராமலும் பாதுகாத்தனர். அப்படித் தீங்கு வந்தால் அரசர் குலத்திற்குத் தீங்கு வரும் என நம்பினர். அதனால் அதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தனர். காவல் மரத்தை வெட்டுவதோ குறை ஏற்படுத்துவதோ இலை தழைகளைப் பறிப்பதோ கூடாது. கிளை, இலை, பூ, காய் போன்ற அனைத்தும் புனிதமாகப் போற்றப்பட வேண்டும் என்பது நியதி. பழந்தமிழ் இலக்கியம் இதைக் ‘கடிமரம்’ என்று குறிப்பிடுகிறது.

தொல்காப்பிய சொல்லதிகார நூற்பா-383 கடி என்னும் சொல்லுக்குக் காப்பு என்னும் பொருளை வலியுறுத்தும் பழந்தமிழக மன்னர்கள், காவல் மரத்தைத் தம் மானத்தின் குறியீடாக உயிரினும் மேலாகப் பாதுகாத்துள்ளனர். சேர, சோழ, பாண்டியர் மற்றும் சிற்றரசர்களும் தங்களுக்கென சில மரங்களை அடையாள மரமாகக் கொண்டிருந்தனர். அவை கடம்பு, புன்னை, மா, வாகை, வேம்பு போன்றனவாகும்.

பழந்தமிழகத்தில் காவல் மரத்தினை ஒரு குறியீடாகவே கருதியுள்ளனர். காவல் மரத்திற்கு ஊறு செய்வதன் வழி மன்னனை இழிவுபடுத்தியுள்ளனர் என்பதனையும் அறியமுடிகிறது. காவல் மரத்தில் யானையைப் பிணித்தல், அதனைத் தடிதல், வெட்டிய அம்மரத்தால் முரசு செய்தல் போன்ற செயல்களை வலுவுடைய மன்னர்கள் செய்தனர். இச் செயல்களால் அம்மரத்திற்கு உரிமையுடைய மன்னனை இழிவு செய்வதற்குச் சமம் எனும் நோக்கில் இதனைச் செய்துள்ளனர். காவல் மரத்தில் அணங்கு உறையும் என்பதனை.

**‘துளங்கிடுங் குட்டந்**
**தொலைய வேலிட்டு**
**துணங்குடை கடம்பின்**
**முழுமுதல் தடிந்து’**

(பதிற்று-88,5-6)

என்னும் வரிகளால் அறியலாம். இவ்வணங்கு இயல்பு உடையதாகும். இது இன்றைய காலத்தில் மரங்களைத் தெய்வமாகக் கருதுவதுடன் ஒப்பு நோக்கத்தக்கது.

பகைநாட்டு மன்னனின் காவல் மரத்தில் களிற்றைக் கட்டி, மன்னனை இழிவு செய்த பல நிகழ்வுகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன.

**‘வடிமணி அணைந்த**
**பணைமருள் நோன்றாள்**
**கடிமரத்தாள் களிற**
**ணைந்து**
**நெடுநீர துறை கலங்க’**

(பதிற்று-33,2-4)

என்னும் அடிகள், காவல் மரத்தில் களிற்றினைக் கட்டி பகை மன்னனை கலங்கச் செய்தமை புலப்படுகிறது. மேலும், வறுமை தீர புரவலர்களைப் பாடிப்பரிசில் பெற மன்னர்களை நாடிச் செல்வது புலவர்களின் இயல்பு.

ஒரு நாள் வறுமை வயப்பட்ட பெருஞ்சித்திரனார் என்னும் புலவர் வெளிமான் என்னும் மன்னனை நாடிச் சென்றார். அப்போது அவன் தூங்கிக் கொண்டிருந்தான். தம் தம்பியிடம் பரிசில் கொடுக்க அறிவித்தான். அவனது தம்பி சிறிது பொருள் கொடுக்க அதனை ஏற்காது. பின்னர் குமண வள்ளலைப் பாடி பெரும் பரிசு பெற்றார். பெருஞ்சித்திரனார். குமண வள்ளல் கொடுத்த யானையை வெளிமானின் கடிமரத்தில் கட்டிச் சென்றார். இது பெருஞ்சித்திரனார் வெளிமானை இகழ்ந்ததற்குச் சமமாகும்.

**‘இரவலர் புரவலை நீயு**
**மல்லை**
**புரவலர் இரவலர்க்கு இல்லை**
**யும் மல்லர்**
**இரவலர் உண்மையும்**
**காணினி இரவலர்க்கு**
**ஈவோர் உண்மையும் காணினி**
**இரவலர்க்கு**
**ஈவோர் உண்மையும் காணினி**
**நின்னூர்க்**
**கடிமரம் வருந்தத் தந்துயரம்**
**பிணித்த நெடுநல் யானை எம்**
**பரிசில்**
**கடுமான் தோன்றல் செல்வல்**
**யானே’**

(பாடல்-162)

என்னும் பாடலில் பெருஞ்சித்திரனார் தன்னைப் பாராது பரிசளிக்கச் சொன்ன வெளிமானை இகழ்ந்து உரைத்தது மட்டுமன்றி அவனைப் பலரறிய இழிவுபடுத்த அவனது கடிமரத்தில் யானையைக் கட்டிச் சென்றமையைப் புறநானூறு கூறுகிறது.

பகை மன்னனை வீழ்த்துவதற்குச் சமமாக காவல் மரத்தை வெட்டி வீழ்த்தும் செயல் கருதப்பட்டது.

**‘கருங்கைக் கொல்லன் அரஞ்**
**செய் அவ்வாய்**
**நெடுங்கை நவியம் பாய்த**
**லின் இலையழிந்து**
**வீகமழ் நெடுஞ்சினை புலம்**
**பக் காவு தொறும்**
**கடிமரந் தடியும் ஓடை தன்**
**னூர்**
**நெடுமதில் வரைப்பிற் கடி**
**மனை இயம்ப**
**ஆங்கினிது இருந்த வேந்த**
**னொடு ஈங்கு நின்**
**சிலைத்தார் முரசங் கறங்க**
**மலைத்தனை யென்பது**
**நாணுத் தகவுடைத்தே’**

(புறம்-36,6-13)

என்னும் பாடல் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் கருவூரை முற்றுமை இட்டிருந்தபோது, கருவூர் மன்னன் தம் நாட்டுக் காவல் மரத்தை வெட்டும் ஓசை கேட்ட போதும் செயலற்றிருந்த நிலையைக் குறிப்பிடுகிறது. காவல் மரத்தை வெட்டி வீழ்த்துவது அரசனையே வென்று வீழ்த்தியதற்குச் சமமாகக் கருதி வீரர்கள் ஆர்ப்பரித்த நிலையையும் அறிய முடிகிறது.

காவல் மரத்துடன் தொடர்புடைய ஒரு வரலாற்றுச் செய்தி பெண்ணுடன் தொடர்புப்படுத்திக் கூறப்படுகிறது. குறுந்தொகைப் பாடலில் நன்னன் என்னும் மன்னன், பெண் கொலை புரிந்த செய்தி பேசப்படுகிறது. நன்னனின் கடிமரம் மாமரம், அம்மரத்தின் காயொன்று அருகில் உள்ள ஆற்றில் தானே வீழ்ந்து மிதந்துவர, அதனை ஆற்றில் குளித்துக் கொண்டிருந்த அந்நாட்டுப் பெண்ணொருத்தி எடுத்து உண்ண அதைக் கண்ட நன்னனின் நாட்டுக் காவலன் அவளை மன்னன் முன்கொண்டு சென்று நிறுத்தினான். மன்னன், காவல் மரக்காயை அந்தப் பெண் உண்டதால் அவளுக்குக் கொலைத் தண்டனை வழங்கினான். தண்டனையை அறிந்த அவளது தந்தை அவளின் நிறைக்கு ஒத்த பொன்பாவையும் 81 களிற்றையும் தண்டமாகத் தருவதாகச் சொன்ன நிலையிலும் மன்னன் நன்னன் அதை ஏற்காமல் கொலை செய்வதில் உறுதியாக இருந்தான். இதற்குக் காரணம் காவல் மரக்காயை உண்டதே.

**‘மண்ணிய சென்ற வொண்ணு**
**தல் அரிவை**
**புனற்தரு பசுங்காய் தின்ற**
**தன் தப்பற்**
**கொன்பதிற் றொன்பது**
**களிற்றொ டவணிறை**
**பொன்செய் பாவை கொடுப்ப**
**வுங் கொள்வான்**
**பெண்கொலை புரிந்த நன்**
**னன் போல**
**வரையா நிரையத்துச் செலீ**
**இயரோ வன்னை’**

(குறு-292)

என்ற பாடல் வழி அறியலாம். இதில் காவல் மரக்காயை யாரும் தொடவோ, உண்ணவோ கூடாது. அது புனிதமாகப் போற்றப்பட வேண்டியது என்பது தெளிவாகிறது.

பகை மன்னர்களின் காவல் மரத்தைத் தடிவதை முதற் குறியாக மன்னர்கள் கருதினமையும் அறியமுடிகிறது. புறத்திணையுள் உழிஞைத் திணையில் இச் செய்திகள் அமைந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆபாசப் பட நடிகராக விரும்பினேன்–ஷாருக்கான்

நக்கலடிப்பதிலும் தன்னைத்தானே விமர்சனம் செய்து கொள்வதிலும் ஷாருக்கானை மிஞ்ச வேறு யாரும் கிடையாது. நீங்கள் எப்படிப்பட்ட நடிகராக வர விரும்பினீர்கள் என்று கேட்கப்பட்ட கேள்விக்கு ஆபாசப் பட நடிகராக வர விரும்பினேன் என்று கூறி அதிரவைத்தார் ஷாருக். டில்லியில் குரு அரிந்தம் சௌத்ரியின் டிஸ்கவர் தி டயமன்ட் இன் யூ என்ற புத்தக வெளியீட்டு விழாவில் ஷாருக் கலந்துகொண்டார். அப்போது அவர் படு ஜாலியாகப் பேசினார்.

நான் இப்படி சூப்பர் ஸ்டாராக வர வேண்டும் என்றெல்லாம் முன்பு நினைக்கவில்லை. ஆப .சப்பட நடிகராக வர வேண்டும் என்றுதான் நினைத்தேன். இதற்காக ரொம்ப ஆர்வமாகவெல்லாம் இருந்தேன். ஆபாசப் படங்களில் 'பக்கா'வாக நடிக்க வேண்டும். 'நல்ல' பெயரெடுக்க வேண்டும் என்றெல்லாம் ஆசையாக இருந்தேன். ஆனால், பாதை மாறி இப்படியாகிவிட்டேன் என்று அவர் கூறியபோது அரங்கமே சிரிப்பலையில் மூழ்கியது. உங்களுக்கு யார் ஆதர்ச நாயகன் என்று கேட்கப்பட்டபோது, எனக்கு எப்போதுமே சில்வர்ஸடர் ஸ்டாலன் தான் ஆதர்ச நாயகன். அவரும் கூட ஒரு ஆபாசப் பட நடிகர்தான் ஆரம்பத்தில். பிறகுதான் ஹொலிவூட் சூப்பர் ஸ்டாரானார் என்று கூறி அரங்கத்தை மேலும் அதிரவைத்தார் ஷாருக்.

## Saturday சினிமா

# தமிழில் வருகிறது அமிதாப்பின் 'பா'

அமிதாப்பச்சனும் அபிஷேக் பச்சனும் நடித்த 'பா' படம் பொலிவூட்டில் வெளியாகி சக்கை போடு போட்டுக் கொண்டிருக்கிறது. இப்படத்தின் ஹைலைட் அமிதாப் மகனாகவும் அவரது மகன் அபிஷேக் அப்பாவாகவும் நடித்திருப்பதுதான். சிறுவயதிலேயே பரகேரியா எனும் நோய் தாக்கி தோற்றத்தில் மாறிவிடும் வித்தியாசமான வேடத்தில் அமிதாப்பச்சன் நடித்திருக்கிறார். இந்தப் படத்துக்கு இளையராஜா இசையமைத்துள்ளார். டைரக்டர் பாலகிருஷ்ணா இயக்கியுள்ளார். உலகமெங்கும் வசூலிலும் சாதனை படைத்துக் கொண்டிருக்கும் 'பா' படத்தை தமிழில் ரீமேக் செய்யவிருக்கிறார்களாம். இதற்கான முயற்சிகளில் இறங்கியிருப்பவர் வேறு யாருமல்ல இளையராஜா தான்.



# பையா வெளிவரத் தடை

பொங்கலுக்கு பையா படம் வெளியாகத் தடை விதித்துள்ளது தயாரிப்பாளர் சங்கம். வருகிற பொங்கலுக்கு கார்த்தி நடித்த ஆயிரத்தில் ஒருவன் மற்றும் பையா படம் இரண்டும் ஒரே நேரத்தில் வெளியாகவிருந்தன. இதனால், விநியோகஸ்தர்கள் அதிருப்திக்குள்ளானார்கள். ஒரே நேரத்தில் இரண்டு படங்களும் வந்தால் வியாபாரம் பாதிக்கும் என்று தெரிவித்தனர். கார்த்தியும் இதை விரும்பவில்லை. ஆயிரத்தில் ஒருவன் படத் தயாரிப்பாளர் இரவீந்திரன் கூறும்போது;

'பருத்திவீரன் படம் வெளியான உடனேயே ஆயிரத்தில் ஒருவன் படத்துக்கு கார்த்தி ஒப்பந்தம் செய்யப்பட்டார். எனவே, இந்தப் படத்துக்கு தான் முன்னுரிமை அளிக்க வேண்டும்' என்றார். பையா பட இயக்குநர் மற்றும் தயாரிப்பாளரான லிங்குசாமியோ, தனது பையா படம் முடிந்து வெளியீட்டுக்குத் தயாராக இருப்பதால் உடனே வெளியிட வேண்டும். இல்லாவிட்டால் நஷ்டம் ஏற்படும்' என்றார். இந்நிலையில், இந்த விடயத்தில் தலையிட்ட தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கம், பையா படத்தைத் தள்ளி வைக்குமாறும் பொங்கலுக்கு ஆயிரத்தில் ஒருவன் மட்டுமே வெளியாக வேண்டும் என்றும் கூறிவிட்டது.

மாஞ்சாவேலு
கார்த்திக்-அருண் விஜய்



# அசினை வெட்டிய முருகதாஸ்

கஜினி மூலம் சூர்யாவுக்கு வாழ்வு கொடுத்தார் ஏ.ஆர்.முருகதாஸ். அதன் பின்பு இவர் இயக்கப் போகும் தமிழ்ப் படத்திலும் சூர்யா தான் நாயகன். இன்னும் சில மாதங்களில் தொடங்கப்படுவதாக இருந்த இந்தப் படத்திட்டத்தில் திடீர் ஸ்பீட் பிரேக்கர்! 2010 இறுதிக்குத் தள்ளி வைக்கப்பட்டுள்ளதாம் படப்பிடிப்பு.

அதுவரைக்கும் வெட்டி மேடைகளில் குட்டிக் கதையா பேசிக்கொண்டிருக்க முடியும்? எப்பவுமே தனக்கு இரத்தினக் கம்பளத்தை வைத்துக்கொண்டு காத்திருக்கும் இந்தி ஏரியாவுக்குப் போய்விட்டார் முருகதாஸ். சல்மான்கான், தீபிகா படுகோனே ஜோடியாக நடிக்கும் புதிய படத்தை இயக்கப் போகிறாராம். தெலுங்கில் வெளிவந்து வசூலை வாரிக் குவித்த கிக் படத்தின் ரீமேக்தான் இது. அறிமுகப்படுத்திய இயக்குநரான தன்னை அம்போவென்று விட்டுவிட்டு பொலிவூட் நாயகர்களின் புகழ்பாடிக் கொண்டிருந்த அசின் மீது ஏக கடுப்பில் இருந்த முருகதாஸ் வாய்ப்பிருந்தும் வலியவே மறுத்துவிட்டாராம் அசினை. பேசிக் கெடுவது ஒரு வகை என்றால் பேசாமல் கெடுவது இன்னொரு வகை போலிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நமீதா நடிக்க மறுத்த காட்சி

18 வயதுப் பையனுடன் படுக்கையறைக் காட்சியில் நடிக்க மறுத்து விட்டாராம் நமீதா. மலையாளத்தில் முன்பு வெளியாகி வெற்றிபெற்ற ரதி நிர்வேதம் என்ற படத்தை தமிழில் அழகான பொண்ணுதான் என தமிழில் உல்டாவாக்கி எடுத்து வருகிறார்கள். இந்தப் படத்தில் விபசாரப் பெண்ணாக நடிக்கிறார் நமீதா. ஒரு காட்சியில் விபசார விடுதியில் உள்ள மற்றப் பெண்களை விட்டுவிட்டு நமீதாவைத் தேர்ந்தெடுக்கிறான் 18 வயதுப் பையன்[ஹீரோ]. இந்த படுக்கையறைக் காட்சியில் நடிக்க முடியாது என ஆரம்பத்தில் நமீதா மறுத்துவிட்டாராம். 'நான் சரத்குமார்,சத்யராஜ்,விஜய்,அஜீத் ஆகியோருடன் நெருக்கமான காட்சிகளில் நடித்து இருக்கிறேன். பதினெட்டு வயதுப் பையனுடன் நடிப்பது வசதியாக இல்லை' என மறுத்துள்ளார் நமீதா. உடனே படத்தின் இயக்குநர் திரு, நமீதாவைச் சமாதானப்படுத்தி 'முதல் ஷொட்'டை படமாக்கிப் பார்ப்போம். மொனிட்டரில் பார்த்து உங்களுக்குத் திருப்தியாக இருந்தால் தொடர்ந்து எடுப்போம்' என்றாராம். அதன் பிறகு நமீதா அந்தக் காட்சியில் நடிக்க ஆரம்பித்தார். முதல் 'ஷொட்'டை மொனிட்டரில் பார்த்த அவர் தொடர்ந்து நடிக்க மறுத்துவிட்டார். இந்தக் காட்சியில் நமீதாவுடன் நடித்தவர் கார்த்தீஸ் என்ற இளைஞர். நமீதா நடிக்க மறுத்ததில் பெரும் ஏமாற்றமடைந்தாராம் அவர்.



வேட்டைக்காரன்-விஜய்

# கரீனாவின் சம்பளம் 10 கோடி ரூபா



இந்தி நடிகை கரீனாகபூரின் சம்பளம் 10 கோடி ரூபாவாக உயர்ந்துள்ளது. இதற்கு முன் இவ்வளவு பெருந்தொகையை சம்பளமாக எந்த நடிகையும் பெற்றதில்லை. ஐஸ்வர்யாராயே 6 கோடி ரூபா தான் சம்பளம் வாங்குகிறார். கரீனாகபூர் இவ்வளவு சம்பளம் வாங்குவதைப் பார்த்து சக நடிகைகள் வாய் பிளந்து நிற்கின்றனர். கரீனாகபூர் சினிமாவில் அறிமுகமானபோது அவரது சம்பளம் சில இலட்சங்கள் தான் இருந்தது. ஜப்விமெட் படத்துக்கு இலட்சக்கணக்கில் வாங்கினார். அப்படத்தின் வெற்றிக்குப் பின் சம்பளம் கோடிகளானது. கோல்மால் 2 படத்துக்கு 3 கோடி ரூபா பெற்றார். தற்போது கோல்மால் 3 படத்துக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். இந்தப் படத்துக்குத் தான் அவருக்கு 10 கோடி ரூபா சம்பளம் பேசப்பட்டுள்ளது.


# ராவணை வாங்க முயற்சி

*தமிழ், தெலுங்கு மற்றும் இந்தியில் டைரக்டர் மணிரத்னம் இயக்கிவரும் படம் ராவண். அபிஷேக் பச்சன், விக்ரம், ஐஸ்வர்யாராய் உள்ளிட்ட பிரபல நட்சத்திரங்கள் நடித்து வரும் இப்படத்தை முதலில் திருபாய் அம்பானிக்குச் சொந்தமான பிக் பிக்சர்ஸ் நிறுவனம் தான் தயாரிக்க இருந்தது. பின்னர் ஏற்பட்ட குளறுபடிகளால் ராவண் தயாரிப்பில் பிக் பிக்சர்ஸ் தன்னை விடுவித்துக் கொண்டது. இதையடுத்து மணிரத்னம் தனது சொந்த நிறுவனமான மெட்ராஸ் டாக்கீஸ் மூலம் ராவண் படத்தைத் தயாரித்து வருகிறார். படப்பிடிப்பு முடிந்து போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் நடந்து வரும் நிலையில், ராவண் படத்தை வாங்க பிக் பிக்சர்ஸ் நிறுவனம் முயற்சி செய்து வருகிறதாம். இதற்காக ஒரு பெரும் தொகையைக் கொடுக்கவும் பேச்சுவார்த்தை நடந்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால், மணிரத்னம் தொடர்ந்து மௌனம் காத்து வருகிறாராம்.*

# விளம்பரங்களில் ஜூகி

சினிமா வாய்ப்புக் குறைந்த நடிகைகள் விளம்பரப் படங்களில் ஆர்வம் காட்டுவது வழக்கம்தான். அந்த வரிசையில் இடம் பிடித்து வெற்றிக்கொடி நாட்டி வருகிறார் பொலிவூட் நடிகை ஜூகி சாவ்லா. தற்போது விப்ரோ நிறுவனத்தில் உல்லன் துணிகளுக்கான பேப்ரிக் கண்டிஷனருக்கான இலச்சினை தூதுவராக ஒப்பந்தமாகியிருக்கும் ஜூகி ஏற்கனவே தாபர்,டயாப்பர்,தேனா வங்கி எனப் பல நிறுவனங்களின் விளம்பரங்களில் நடித்துள்ளார். விளம்பரங்களில் மும்முரம் காட்டி வரும் ஜூகியின் வசம் ஐ.ஏம் என்ற படம் உள்ளது.

அசல் - அஜீத், ஷமீரா ரெட்டி



# இணையத்தில் சினேகா

வாரம் ஒரு நடிகை இணையத் தளங்களை ஆக்கிரமித்து விடுகிறார்கள் பரபர செய்தியின் மூலம். அசின்,பிரியாமணி,லட்சுமிராயின் மகா கவர்ச்சியான படங்கள் இணையத்தளங்களில் உலா வருவதாகக் கூறப்பட்டது. இந்த வாரம் அவர்களையெல்லாம் பின்னுக்குத் தள்ளிவிட்டு அந்த இடத்தைப் பிடித்திருப்பவர் சினேகா. குடும்பப் பாங்கியாக வலம் வரும் சிநேகா, முதல் முறையாக கோவா படத்தில் படு கவர்ச்சியான நீச்சலுடைக் காட்சியில் நடித்து சூடேற்றியுள்ளாராம். படம் வெளியாவது வரை தனது நீச்சல் உடைப் படங்களை வெளியிடக்கூடாது என்று நிபந்தனை விதித்தாராம். ஆனால், பின்னர் மனதை மாற்றிக் கொண்டு கவர்ச்சிப் படங்களை கட்டவிழ்த்துவிட்டார் நெட்டில். இப்போது அந்தக் கவர்ச்சிப் படங்களில் உள்ள 'தம்மாத்தூண்டு" துணியையும் நீக்கிவிட்டு சிநேகாவின் படங்களை உலாவ விட்டிருக்கிறார்களாம் சில குறும்புக்கார ஆசாமிகள். கோவாவில் பிகினி உடையில் சிநேகா என்ற அறிவிப்புடன் அவரது படங்கள் இன்ரர் நெட்டில் கண் சிமிட்டுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வார மெயிலில் இவர்...

# ரொபேர்ட் பிளேக்



இலங்கைக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவரும் தெற்கு மற்றும் மத்திய ஆசிய நாடுகளுக்கான அமெரிக்காவின் உதவி வெளிவிவகாரச் செயலருமான ரொபேர்ட் ஓ பிளேக் தனது தூதுவர் பதவி நிறைவின் பின்னர் நாட்டைவிட்டு வெளியேறி முதற்தடவையாக இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொண்டு திரும்பியுள்ளார்.

இலங்கைக்கான பிளேக்கின் விஜயத்தின் உண்மை நோக்கம் எதுவென தெரியாத நிலையில் தனது விஜயத்தின் இறுதியில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அதிகாரப் பகிர்வுடனான தீர்வொன்றை முன்வைக்க அரசும் எதிர்க்கட்சிகளும் இணைந்து செயற்பட வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்திச் சென்றுள்ளார்.

மூன்று தசாப்தகால மோதல்கள் தீவிரமடைந்திருந்த 2006 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அதாவது செப்டெம்பர் ஒன்பதாம் திகதி இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

அன்று முதல் 2009 ஆம் ஆண்டின் நடுப்பகுதி வரை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக பிளேக் பணியாற்றியிருந்தார்.

குறித்த இக் காலப்பகுதியில் நான்காம் கட்ட ஈழப்போர் மிகவும் உக்கிரமடைந்து 2009 மே மாதப் பிற்பகுதியில் மோதல்கள் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதாகவும் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதாகவும் அரச தரப்பு அறிவித்திருந்தது.

இந்நிலையில், இலங்கை வரலாற்றின் முக்கியமானதொரு காலகட்டத்தில் தான் தூதுவராகப் பணியாற்றி முழு இலங்கையுமே அரச கட்டுப்பாட்டுக்குள் வந்திருக்கும் நிலையில் தான் பணி நிறைவு செய்து நாட்டைவிட்டு வெளியேறுவதாக அமெரிக்க தூதுவராக விருந்து பிரியாவிடை பெற்றுச் செல்லும் இறுதிச் செய்தியாளர் மாநாட்டில் பிளேக் அறிவித்திருந்தார்.

1980 ஆம் ஆண்டு ஹவார்ட் பல்கலைக்கழகத்தில் தனது பி.ஏ. பட்டப்படிப்பினை பூர்த்தி செய்த பிளேக் 1984 இல் ஜோன்ஸ் ஹொப்கின்ஸ் கல்லூரியில் (உயர் சர்வதேச விவகார கற்கை நிலையம்) 1984 சர்வதேச உறவுகளுக்கான எம்.ஏ. பட்டத்தினைப் பெற்றுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து 1985 ஆம் ஆண்டு அமெரிக்க அரசின் வெளிவிவகார சேவையில் தன்னை இணைத்துக் கொண்ட போது பிளேக் வெளிவிவகார சேவைகள் அதிகாரியென்ற பதவி பிளேக்கிற்கு வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து துனிஷியா, அல்ஜீரியா, நைஜீரியா மற்றும் எகிப்து ஆகிய நாடுகளிலுள்ள அமெரிக்கத் தூதரகங்களில் பிளேக் பணியாற்றியிருந்தார்.

அத்துடன் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திலும் பிளேக் பல்வேறு பதவிகளை வகித்தார்.

பின்னர் 2003 முதல் 2006 நடுப்பகுதியில் இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதரகத்தில் பிரதித் தூதுவராகப் பணியாற்றியிருந்தார்.

அதனைத் தொடர்ந்தே 2006 ஆம் ஆண்டு செப்டெம்பர் எட்டாம் திகதி இலங்கைக்கு வருகைதந்த பிளேக் மறுநாள் ஜனாதிபதி முன்னிலையில் தூதுவராக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இலங்கை மற்றும் மலேசியா ஆகிய இரு நாடுகளுக்கும் சமகாலத்தில் பிளேக் தூதுவராக பணியாற்றியுள்ளார்.

2007 ஆம் ஆண்டு பெப்ரவரியில் கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற அபிவிருத்திக் கூட்டமொன்றிற்கு ஹெலிகொப்டரில் சென்றிருந்த பிளேக் மட்டக்களப்பு விமானத்தளத்தில் வந்திறங்கியபோது மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் சிறு காயங்களுக்கு உள்ளாகினார்.


அதேவேளை, யுத்த காலங்களில் அமெரிக்காவின் செயற்பாடுகளுக்கு எதிரான கருத்துகள் இலங்கையிலுள்ள சில அரசியல் கட்சிகளால் வெளியிடப்பட்ட அதேவேளை, எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் பிளேக்கின் காலப்பகுதியில் நடைபெற்றிருந்தது.

இந்நிலையில், தனது அமெரிக்கத் தூதுவர் பதவியை பிளேக் நிறைவு செய்த பின்னர் தெற்கு மற்றும் மத்திய ஆசிய நாடுகளுக்கான அமெரிக்க உதவிச் செயலர் பதவி பிளேக்கிற்கு வழங்கப்பட்டு இன்றுவரை அப்பதவியில் தொடர்கின்றார்.

இந்நிலையில் இலங்கை இனப் பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வு மூலமான தீர்வு முன்னெடுக்கப்பட வேண்டுமென்ற பிளேக்கின் வலியுறுத்தலுக்கு இலங்கை அரசின் பதில் எவ்வாறு அமையுமென்பதை அறிய சில காலம் பொறுத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

**யோ.நிமல்ராஜ்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



















Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பரிதாபம்

எமக்கும் எங்கள் நாட்டினிலே
அவசியம் தேவை சிங்களமும்
அன்று நாங்கள் உணர்ந்திருந்தால்
இன்று எமக்கு அவஸ்தை இல்லை

சிங்களம் தெரிந்தால் நம் நாட்டில்
சிலதை செய்யலாம் தன்பாட்டில்
சீக்கிரம் நீங்கள் சிந்தித்தால்
சிகரத்தில் ஏறி பேசிடலாம்

மொழி புரியாத தமிழன் இன்று
அவஸ்தை படுவதை யாரறிவார்?
போனால் தெரியும் சிவில் கந்தோர்
அவர் படும் பாட்டை 'பரிதாபம்'

அரைகுறை தெரிந்த ஒருவரிடம்
மாத்தியா சொல்வார் ஒரு விடயம்
அதை எங்கள் அண்ணன் அக்கணமே
மாறியே கூறி குழப்பிடுவார்.

**எம். சொலமன்,**
**கொக்குவில்.**

## ஈர நினைவுகளோடு...



கசக்கிப் பிழிந்து
உதறிக் காயப்போட்ட
நினைவுகள்
மெல்லத் தலைதூக்க
ஈரமான மாலை நேரத்தில்
வந்து குதித்தாய் எனக்குள் நீ.

வந்தாலும்...
இந்தத் தலைக்குள் ஏறாத
கணித பாடம் போலவே
எனக்குள் நீ எந்த மாற்றத்தை
யும்
ஏற்படுத்த வில்லை.

ஆனால்...
நூறு மீற்றர் ஓடுவதற்காக
ஆரம்பிக்கும் இடத்தில் நிற்கும்
ஓட்ட வீரனைப்போல...
இதயம் தந்தியடித்துக் கொண்
டிருந்து.

உனது பதினாறு வயது உரு
வமே
எனக்குள் வந்து போனது.

நெஞ்சைவிட்டு
அகல்வதேயில்லை
இளங்காலத் துள்ளல்கள்.

நீ காட்டித் திரிந்த எடுப்புகளும்
நெளிப்புகளும் கொஞ்சம்
அதிகந்தான்.

'பாலப்பம் போல'
இப்போதும் உன்னுடைய
நினைவு
இனிக்கிறது எனக்கு.

காலில் சக்கரம் பூட்டிக்
கொண்டு
காக்கையாய்...
இரைதேடிப் பறந்துதிரிந்த
காலம் அது.

அப்பா
வின்
உழைப்பில்
அள்ளிச்
செலவழித்த
நாட்கள் அவை.

மறப்பதற்கும்
நினைவுகள் தேவைதான்.

அந்த
ஈரம் உடல்முழுக்க...
ஊறிப்போனேன்
கூதலாயிருக்கிறது.

இன்று உனது நினைவுகளைப்
போர்த்திக் கொண்டே
படுக்கப் போகிறேன்.

**- நீலா பாலன்**




## யாழ்ப்பாணத்து மின்சாரம்

*இரவு நேரம்*
*இல்லாமல் போகும் மின்சாரத்தை*
*திட்டிக் கொண்டனர்*
*ஊரவர்கள்!*

*மின்சாரம் இல்லையென்றால்*
*எனக்கென்ன எனக்கு நீ வந்து*
*போனால்ப் போதும்*
*ஒளி பெற்று விடும்*
*என் வீடு!*

**எம்.சந்தோஸ்,**
**சமரபரகு,**
**வல்வெட்டித்துறை**

## நிலவை விடவும்



நிலவா? நீயா?
அழகு?
பூமியிடம் கேட்டேன்...
என்னை நிலவு சுற்றிவருகிறது-
ஆனால்
நானோ-உன்னவளை
சுற்றிவர விரும்புகிறேன்...
என்றது பூமி...!

உன் மடியினில் தலைவைத்து
உலகத்தை ரசிக்க விரும்பினேன்...
நான் ரசித்தது உலகத்தை
அல்ல-உன்னைத்தான்...
ஏன் என்கிறாயா?
என் உலகமே
'நீ' தானே?

**ப்ரஜன், வேலணை-6.**

## கல்விச் சமூகம் எங்கே போகிறது...

விஞ்ஞானத்தின்
விந்தையெல்லாம்
விடியலை நோக்கியா?
இல்லை இல்லை...
மனிதத்தின்
வாழ்வுதனை
மங்கிடச் செய்வதற்கே!
மங்கையர்கள்
வாழ்வுதனை
உயர்த்திட்ட எம்தேசம்
மானத்தை
விலை பேசும்
காலத்தின்
கோல மென்ன?
புதுமைதனை கற்று
புதுவாழ்வு
பெற்றிடுவோம்
என்று தானே
பேசிக்கொள்வோம்
ஆனால்...
கற்றவர்கள் கூட
கடைசிவரை
கண்ணியமாய்
நடப்பதுண்டோ?
ஊருக்கு உபதேசம்
உனக்கு இல்லையடி
என்ற வார்த்தை
தேசமெல்லாம் ஆறாய்
பாய்ந்திடும் நேரம் இது

**சிறுவையூரான்,**
**சிறுப்பிட்டி.**

## தேர்தல் வியூகம்

அரசாங்கத்தின் அதிரடி அறிவிப்பு
முட்கம்பிகள் நீக்கி
முகாமில் முடங்கிய மக்களுக்கு
நடமாட முழுச் சுதந்திரம்
தலைநகரை தரிசிக்க
தடைகள் பல நீக்கி
தாராள போக்குவரத்துக்கு
தரைவழிப் பாதை தயார் நிலையில்
உதரப் பசி போக்கும்
உலருணவு சுமந்த ஊர்திகள்
ஏ-ஒன்பது வழியாக
ஊடறுத்து செல்ல உத்தரவு
வடக்கும் தெற்கும்
வாரியணைத்து குதூகலிக்கும்
வளமான திட்டங்கள்
வருங்கால தேர்தலில்
வாக்குகளை வசீகரிக்கும்
வியூகம் என்ற சேதி
பொக்கை குவித்து புன்னகைக்கும்
மழலையும் அறியுமென்று
அறிவாரோ!

**மங்களம் மனோராகுதன்**

*உங்கள் கவிதைகளும் இப்பகுதியில்*
*வரவேண்டுமானால்*
**'Saturday மெயில்'**
**இல. 336, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்**
*என்னும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்...*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வில்லங்கமான பெண் விபரீதமான நோய்

தினசரி 300 முறை செக்ஸ் உணர்வால் தூண்டப்பட்டு அவதிப்பட்டு வந்த பெண்ணுக்கு அதை சரி செய்யும் வகையிலான பொருத்தமான காதலர் கிடைத்து விட்டதால் அப்பெண் மகிழ்ச்சியடைந்துள்ளார்.

இப்படிப்பட்ட செக்ஸ் உணர்வுடையவர்களுக்கு உள்ள செக்ஸ் குறைபாட்டுக்கு பெசிஸ்டன்ட் செக்ஸுவல்அரௌசல் சின்ட்ரோம் என்று மருத்துவர்கள் பெயர் வைத்துள்ளனர். இவர்களுக்கு ஒருநாளைக்கு நூற்றுக்கணக்கான முறை செக்ஸ் உணர்வு ஏற்படும். இதனால் இயல்பான வாழ்க்கையை வாழ முடியாமல் பெரும் செக்ஸ் அவஸ்த்தைக்குள்ளாவார்கள்.

இப்படிப்பட்ட அவஸ்தையைத் தான் இங்கிலாந்தைச் சேர்ந்த மிஷெல்தோம்சன் என்பவர் சந்தித்து வந்தார். மிகக் கடுமையான செக்ஸ் உணர்வால் சிரமப்பட்டு வந்த அவருக்கு அதைத் தீர்த்து வைக்கும் வகையில் சரியான காதலர் கிடைத்துள்ளாராம். இதனால் உணர்வு தீர்ந்து அப்பெண் தற்போது சந்தோஷமாக உள்ளார்.

தோம்சனின் நிலை குறித்து டாக்டர்கள் கூறுகையில்;

இதுபோன்று குறைபாடு உள்ளவர்களுக்கு செக்ஸில் திருப்தியே வராது. எப்போது வேண்டுமானாலும் அவர்கள் செக்ஸ் உச்சத்தை அடைவார்கள் என்கின்றனர்.

42 வயதாகும் மிஷெல் தனது நிலை குறித்து கூறுகையில்; எனக்கு செக்ஸ் குறைபாடு மிகக் கடினமானது, கடுமையானது. ஆனாலும் இதை அனுபவிக்க நான் கற்றுக்கொண்டுவிட்டேன். இப்படி பெருமளவில் எனக்கு செக்ஸ் உச்சநிலை ஏற்படுவதை அதிர்ஷ்டவசமாக கருதுகிறேன். யாருக்கும் இப்படிப்பட்ட பாக்கியம் கிடைக்காது. எனது புதிய காதலர் ஆன்ட்ரூ கார் எனது செக்ஸ் குறைபாட்டை புரிந்துகொண்டுள்ளார். எனது பிரச்சினையைப் புரிந்துகொண்டு அதை சரி செய்ய உதவுகிறார்.

நாங்கள் ஒருநாளைக்கு பத்து முறை செக்ஸ் வைத்துக்கொள்கிறோம். எனக்கு அற்புதமான தீர்வாக அவர் அமைந்துள்ளார். இதுவரை எனது செக்ஸ் பசியைப் போக்கும் காதலரைத் தேடி நான் கடுமையாக கஷ்டப்பட்டேன். இனிமேல் அந்தக் கஷ்டம் எனக்கு இல்லை. கார் கிடைத்துவிட்டார் என்கிறார்.

நான்கு குழந்தைகளுக்குத் தாயான மிஷெல் இதற்கு முன்பு நிறைய காதலர்களை வைத்திருந்தார். ஆனால் இவரது செக்ஸ் பசிக்கு தீனி போட முடியாமல் அவர்கள் ஓடிப்போய்விட்டார்கள். ஒரே ஒரு நபர் மட்டும் ஐந்து ஆண்டுகள் வரை நீடித்தார். பின்னர் அவரும் போய்விட்டார். தற்போது கார் கிடைத்துள்ளார். அவரால் தான் முழு திருப்தியுடன் இருப்பதாக மிஷெல் கூறுகிறார்.

# உடலைக் கெடுக்கும் கறிக்கோழிகள்

மக்கள் தொகை பெருக்கத்திற்கேற்ப உணவுத் தேவையும் அதிகரித்து வருகிறது.இதை சமாளிக்க விஞ்ஞானத்தின் பெயரால், இயற்கையை மீறி பல்வேறு வழிமுறைகளில் உணவு உற்பத்தி செய்யப்படுகின்றது. அவற்றில் ஒன்றுதான் கறிக்கோழி. இந்த கோழிகள் கறிக்காக மட்டுமே வளர்க்கப்படுகின்றன. வேகமாக வளர கோழிகளுக்கு ஈஸ்ட்ரோஜென் எனப்படும் ஓமோன் ஊசி போடப்படுகிறது. இந்த ஈஸ்ட்ரோஜென் ஊசி செல்களை வேகமாக வளர வைத்து கோழியின் எடையை அதிகமாக்குகிறது.கோழி வளர்ப்போர் சிலர் குறுகிய லாப நோக்கத்தோடு ஈஸ்ட்ரோஜென் மருந்துகளை கோழிகளுக்கு அதிகளவில் கொடுத்துவிடுகின்றனர். இத்தகைய கோழிக்கறி அதிகம் சாப்பிடுபவர்களுக்கு உடலில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.



நம் உடல் செயல்பாட்டில் ஹோமோன்களின் பங்கு மிகவும் முக்கியமானது. மனித உடலில் இன்சுலின், பிட்யூட்டரி, ஈஸ்ட்ரோஜென், புரஜெக்ஸ்ட்ரான் உட்பட 30 க்கும் மேற்பட்ட ஓமோன்கள் சுரக்கின்றன. இந்த ஓமோன்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு முக்கியமான வேலையை செய்து வருகிறது. இவை அனைத்தும் மனித உடலில் தேவையான அளவு இருந்தே ஆக வேண்டும். ஏதேனும், ஒரு ஓமோன் குறைவாக சுரந்தாலோ, தேவையை விட அதிகமாக சுரந்தாலோ உடலில் பல்வேறு சிக்கல்களை ஏற்படுத்தும். இவற்றில் புரஜெக்ஸ்ட்ரான் ஆர்மோன்கள் ஆண்களுக்கும், ஈஸ்ட்ரோஜென் பெண்களுக்கும் 2 ஆம் நிலை பால்வேறுபாட்டை பிரிக்கிறது. அதாவது இரு பாலாருக்கும் உடல் உறுப்புகளில் மாற்றங்களையும்,உணர்வுகளையும் ஏற்படுத்துகிறது.



புரஜெக்ஸ்ட்ரான் ஓமோன்கள் பெண்களுக்கு அதிகம் சுரந்தால், முகத்தில் முடி வளர்வது உள்ளிட்ட பிரச்சினைகளும், ஈஸ்ட்ரோஜென் ஆண்களுக்கு அதிகம் சுரந்தால் கைனக்கோமாஸ்ட்ரோ எனப்படும் மார்பு வீக்க நோய் உள்ளிட்ட பல்வேறு நோய்கள் உண்டாகின்றன. கறிக்கோழிகளுக்கு போடப்படும் ஈஸ்ட்ரோஜென் ஓமோன்கள் சமைத்த பின்னரும் நிலைமாற்றமில்லாமல் உடலுக்குள் செல்வதால், இரு பாலாருக்கும் உடலில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

இது குறித்து மதுரை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவத்துறை உதவிப் பேராசிரியர் டாக்டர் முரளிதரன் கூறியதாவது;

உணவுப் பொருட்களில் உள்ள ஈஸ்ட்ரோஜென் சமைத்த பின்னரும் உணவில் கலந்தே இருக்கும் என ஆய்வுக்கட்டுரைகள் கூறுகின்றன. ஈஸ்ட்ரோஜென் பெண்களின் உடலில் தேவையை விட அதிகரிக்கும் போது 10 முதல் 12 வயதுக்குள்ளேயே சிறுமிகள் பூப்பெய்துவிடுகின்றனர். மேலும் கர்ப்பப்பை புற்று நோய், உடல் பருத்தல் போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன. ஆண்களுக்கு ஈஸ்ட்ரோஜென் ஓமோன்கள் அதிகரிக்கும் போது மார்பக வீக்கநோய் ஏற்படுகிறது. ஆண்களுக்கு மார்பில் வீக்கம் ஏற்பட்டு வலி ஏற்படும். அதேபோல் ஆண்களிடம் பெண் தன்மை, சிறுவர்களுக்கு ஆண் குறியில் வளர்ச்சியின்மை போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன. எனவே, ஈஸ்ட்ரோஜென் பயன்படுத்தப்படும் உணவுப் பொருட்களை குறைத்துக் கொள்வது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெல்ல நடந்தால் மேனி என்னாகும்...?



ஆகா மெல்ல நட மெல்ல நட மேனி என்னாகும் என்று அந்தக் காலத்தில் ஒரு சினிமாப் பாட்டு. காதலி விரைவாக நடந்து செல்வதைப் பார்த்து அவளுக்கு மேனி நொந்து விடுமே என்று வருந்திய காதலன் பாடுவதாக அந்தப் பாடல் அமைந்திருந்தது.

ஆனால், இப்போது மெல்ல நடந்தால் மெல்ல நடந்தால் மேனி என்னாகும் என்றுதான் பாடவேண்டும் போலிருக்கிறது.

மெல்ல நடக்கும் சுபாவம் கொண்டவர்கள் இருதய நோயினால் மரணமடையக் கூடிய ஆபத்தைக் கூடுதலாகக் கொண்டிருக்கிறார்கள் என்று ஆய்வொன்றின் மூலம் கண்டறியப்பட்டிருக்கிறது. இருதய நோய்களினால் மாத்திரமல்ல, பக்கவாதம் போன்ற நோய்களினாலும் அவர்கள் பாதிக்கப்படுவர் என்று ஆய்வு கூறியிருக்கிறது.

பிரான்ஸின் பியரீ அன்ட் மேரி கியூரி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மருத்துவ நிபுணர்களினால் மேற்கொள்ளப் பட்ட மேற்படி ஆய்வின் முடிவுகள் பிரிட்டிஷ் மெடிக்கல் ஜேர்னலில் வெளியிடப்பட்டிருக்கிறது.

65-85 வயதுக்கு இடைப்பட்ட 3208 ஆண்களையும் பெண்களையும் 5 வருடங்களாக இந்த நிபுணர்கள் தங்களது ஆய்வுக்குப் பயன்படுத்தியிருந்தார்கள். இந்த ஆண்களும் பெண்களும் நடக்கின்ற வேகம், ஓடாமலேயே அவர்கள் கூடுதல்பட்சம் எந்தவேகத்தில் நடக்கிறார்கள். குறைந்த பட்சம் எந்த வேகத்தில் நடக்கிறார்கள் என்பதை அறிந்த கொள்வதற்காக தொடர்ச்சியான பலபரிசோதனைகளை ஆய்வாளர்கள் செய்தனர்.

அந்த 5 வருட ஆய்வுகால கட்டத்தில் மேற்கண்ட ஆண்களிலும் பெண்களிலும் 209 பேர் மரணமடைந்து போனார்கள். 99 பேர் புற்று நோயினாலும் 59 பேர் இருதய நோய்களினாலும் 51 பேர் வேறு பல நோய்களினாலும் மரணமடைந்தனர்.

மிகவும் ஆறுதலாக நடப்பவர்கள் விரைவாக நடப்பவர்களை விட இருதய நோய்களினால் மரணமடைவதற்கான ஆபத்தை மூன்று மடங்கு கூடுதலாகக் கொண்டிருக்கிறார்கள் என்று முடிவில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

## 25 சதத்துக்கு ஏன் சண்டை?



தொழிற்சாலையொன்றில் பணிபுரியும் ஊழியர் ஒருவர் இரவு நேரக் கடமை முடிந்து வீடுதிரும்பிக்கொண்டிருந்தார். நள்ளிரவு என்பதால் வீதிகளில் சனநடமாட்டமேயில்லை.

திடீரென்று அங்கு வந்த திருடன் ஒருவன் அந்த ஊழியரை மிரட்டிப் பணம் பறிக்க முயன்றான். ஊழியரோ மசியவில்லை. இருவருக்குமிடையே சண்டை மூண்டது. சனநடமாட்டமில்லாத வீதியில் இவர்களை விலக்குப் பிடிக்கவும் யாருமேயில்லை.

இருவரும் நீண்டநேரம் மல்லுக்கட்டி இறுதியில் களைத்துப் போய் விட்டனர். திருடன் ஊழியரின் சட்டைப் பையில் இருந்து வெறுமனே 25 சதத்தைத்தான் எடுக்க முடிந்தது.

நீண்ட நேரம் மல்லுக்கட்டியும் இறுதியில் 25 சதமே கிடைத்ததால் விரக்தியடைந்த திருடன் ஊழியரைப் பார்த்துக்கேட்டான் - இந்த 25 சதத்தை இழக்காமல் இருப்பதற்காகவா என்னுடன் இவ்வளவு கஷ்டப்பட்டு மல்லுக்கட்டினாய்?

ஊழியர் சொன்னார் நான் நினைத்தேன் எனது சப்பாத்துக்குள் நான் மறைத்து வைத்திருக்கும் 2500 ரூபாவை எடுப்பதற்குத் தான் நீ முயற்சிக்கிறாய் என்று.

## கிளின்டனின் மணிக்கூடு



அமெரிக்காவில் தேவாலயம் ஒன்றுக்கு அருகாக கன்னியாஸ்திரிகள் தங்கும் விடுதியில் சுவரெங்கும் மணிக்கூடுகள் காணப்பட்டன.

தேவாலயத்துக்கு வழிபட வந்த ஒருவர் வழிபாட்டை முடித்துவிட்டு இந்த கன்னியாஸ்திரிகள் விடுதியையும் பார்வையிட வந்தார்.

எண்ணற்ற மணிக்கூடுகள் சுவர்களில் காணப்பட்டதையடுத்து வியந்துபோன அந்த நபர் 'எதற்காக இவ்வளவு பெருந்தொகையில் மணிக்கூடுகளைத் தொங்க விட்டிருக்கிறீர்கள்' என்று கேட்டார்.

அதற்குப் பதிலளித்த ஒரு கன்னியாஸ்திரி, இந்த தேவாலயம் மிகவும் அதிசயங்கள் நிறைந்தது. உலகில் உள்ள அதி முக்கிய பிரமுகர்கள் பொய் சொல்லும் ஒவ்வொரு தடவையும் அவர்களின் பெயரில் ஒதுக்கப்பட்டிருக்கும் மணிக்கூடுகள் ஒவ்வொரு செக்கன் விரைவாக நகர்ந்து கொண்டிருக்கும் என்று சொன்னார்.


ஒரு மணிக்கூடு அசையாமல் இருந்ததைப் பார்த்த நபர் 'இது யாரின் பெயரில் ஒதுக்கப்பட்ட மணிக்கூடு' என்று கேட்டார்.

அதற்குரியவர்கள் பொய்சொல்வதில்லை என்பதால் அந்த மணிக்கூட்டின் கம்பிகள் நகரவில்லை. அதற்குரியவர் அன்னை தெரேசா என்று கன்னியாஸ்திரி பதிலளித்தார்.

பில் கிளின்டனின் பெயரில் ஒதுக்கப்பட்ட மணிக்கூடு எது என்று நபர் கேட்டதும் கன்னியாஸ்திரி 'அதை நாம் சமையலறையில் வைத்திருக்கிறோம். காற்றாடியாக எமக்கு அது உதவுகிறது' என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரிய ஒளியிலிருந்து பெற்றோல்



மனித இனம் பெருகப் பெருக அவர்களின் தேவையும் அதிகரிக்கிறது. இதனால், நாம் பயன்படுத்தும் தண்ணீர் உட்பட அனைத்து பொருட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்படும் ஆபத்து உள்ளது. எனவே மாற்றுப் பயன்பாடு குறித்த ஆய்வுகள் தீவிரமாகி வருகிறது.

இதன் விளைவாக எரிபொருளுக்கு மாற்றாகப் பயோடீசலும், ஹைட்ரோகார்பனும் பயன்படுத்துவது அதிகரித்துள்ளது. மின் தேவைக்கு சூரிய ஒளியைப் பயன்படுத்தும் திட்டமும் விரிவாக்கப்பட்டு வருகிறது. இந்தநிலையில், சூரிய ஒளியில் இருந்து தண்ணீரும், பெற்றோலும் எடுக்கும் முறையை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இதற்காக சி.ஆர்.5 என்ற நவீன சாதனம் வடிவமைக்கப்பட்டு உள்ளது. Counter Rotating Ring Receiver Reactor Recaperator என்பதன் சுருக்கம் தான் சி.ஆர்.5. இது வெப்பப் பகுதி, குளிர்வான பகுதி என இரு பகுதிகளைக் கொண்டது. இதில் குவிக்கப்படும் சூரியக் கதிர்கள் ஒன்றுபடுத்தப்பட்டு பல்வேறு மாற்றங்களுக்குப் பிறகு தண்ணீரும், எரிபொருளும் கிடைக்கிறது.

இந்தக் கருவியில் உள்ள வெப்பமான பகுதி சூரிய ஒளியால் 2,700 டிகிரி வரை வெப்பமாகி கொதிக்கும். அப்போது இரும்பு ஒக்சைடில் இருந்து ஒட்ஸிஜன் மூலக்கூறுகள் பிரிக்கப்படுகிறது. அதேநேரத்தில் குளிர்வான பகுதியில் கார்பன்டை ஒக்சைட்டில் இருந்தும் ஒரு ஒட்சிஜன் அணு பிரிக்கப்படுகிறது. இதனால் கார்பன்டை ஒக்சைட்டு கார்பன் மோனாக்ஸைடாக மாறுகிறது.


இதேபோல ஹைட்ரஜன் அணுக்களும் உற்பத்தி செய்யப்படுகிறது. இது மற்ற ஒட்சிஜன் அணுக்களுடன் இணைந்து தண்ணீரை உருவாக்குகிறது.மேலும் ஹைட்ரஜன் அணுக்களையும், கார்பன் மோனாக்சைடையும் சேர்க்கும்போது சின் கேஸ் எனப்படும் ஒருவகை எரிபொருள் கிடைக்கிறது. இது பெற்றோல் போல இருக்கிறது.

இந்த எரிபொருளை தற்போது உபயோகித்தல் உள்ள ஹைட்ரோகார்பன் எரிபொருளைப் போல ஜெட் விமானங்களுக்கும் பயன்படுத்தலாம். பெற்றோல், டீசல் போலவும் உபயோகிக்கலாம்.

இந்த ஆய்வில் கார்பன்ஒட்சைட்டை மறு சுழற்சி செய்யும்போது வெளியாகும் கார்பனையும் எரிபொருளாக பயன்படுத்த முடியும் என்பது இதன் சிறப்பம்சம். எனவே ஒரே கல்லில் பல மாங்காய் அடிக்கும் திட்டமாக இது உருவாகி வருகிறது. அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ள இந்த முறை இன்னும் 10 ஆண்டுகளில் பரவலாகும் என்று தெரிகிறது.

அதிகப்படியான சூரிய ஒளி கிடைக்காவிட்டால் இந்தத் திட்டத்தை செயல்படுத்த முடியாது என்பது தான் இதில் கவனிக்க வேண்டிய விடயம்.

## விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்





# கண்ணிவெடிகளை கண்டுபிடிக்கும் பக்றீரியாக்கல்

பக்றீரியா ஒரு நுண்ணுயிரி. தோசை மாவை புளிக்க வைப்பது, ரொட்டி தயாரிக்க உதவுவது போன்ற பல நன்மை செய்யும் பக்றீரியாக்களும் இருக்கின்றன. நோய்களைப் பரப்பும் தீமையான பக்றீரியாக்களும் உள்ளன.

சமீபத்தில் ஒரு வகை பக்றீரியாக்கள் கண்ணிவெடிகளை காட்டிக் கொடுப்பதில் நமக்கு உதவுவது தெரிய வந்துள்ளது. ஒரு வகை பக்றீரியாக்களில் சில மாற்றங்களை ஏற்படுத்தி இந்த சிறப்புத்தன்மை கொண்ட பக்றீரியாக்கள் வளர்க்கப்படுகின்றன. இதனை ஸ்பிரே மூலம் தெளித்தால் கண்ணிவெடி உள்ள இடங்களில் இருக்கும் பக்றீரியாக்கள் சிறிது பச்சை நிறமாக ஒளிரும். இதைவைத்து அபாயமான வெடிகள் இருப்பதை அறிந்து கொள்ளலாம்.


கண்ணிவெடிகள் போர்க் காலங்கள் முடிந்த பின்னும் நாட்டுக்கு தலைவலியாக இருக்கும். இது மனிதர்களுக்கு மட்டுமன்றி விலங்குகளுக்கும் எதிரி. அத்துடன் சுற்றுச் சூழலுக்கும் தீங்கானதாகும். இனி இந்த வகை பக்றீரியா மூலம் எளிதில் கண்ணிவெடிகளை கண்டுபிடித்து அகற்றலாம்.

இதேவேளை,வெடிகுண்டுகளை கண்டுபிடிக்க மெட்டல் டிடெக்டர் என்ற கருவியை பயன்படுத்துகிறார்கள். இந்த கருவியை பயன்படுத்தி தரையில் வெடிகுண்டுகள் எதுவும் புதைத்து வைக்கப்பட்டுள்ளதா? என்று சோதனை செய்வது வழக்கம். இதற்காக உள்ள கருவியை கையில் சுமந்தபடி தரை பகுதியை சோதனை செய்வார்கள்.

இது சிரமம் நிறைந்த பணியாகும். இதை குறைக்க வெடிகுண்டுகள் புதைக்கப் பட்டுள்ளதா? என்பதை கண்டுபிடிக்கும் கருவி இணைந்த காலணியை உருவாக்கி உள்ளனர். எனவே இந்த நவீன காலணியை அணிந்தபடி நடந்து சென்றாலே போதும் வெடிகுண்டு புதைத்து வைக்கப்பட்டிருந்தால் கண்டுபிடித்துவிடும்.

# தண்ணீருக்குள் விமானம்

விஞ்ஞானத்தில் அவ்வப்போது வியக்கத்தக்க கண்டுபிடிப்புகள் வந்துகொண்டே இருக்கும். சமீபத்தில் நீரிலும் நிலத்திலும் செல்லும் கார் அறிமுகமானது. அதேபோல புதிதாக வந்திருப்பது தண்ணீருக்குள்ளும் பறக்கும் விமானம். இங்கிலாந்து இராணுவத்துக்குச் சொந்தமான சப்ஏவியேட்டர் சிஸ்டம் என்ற அமைப்பு இந்த அதிரடி விமானத்தை தயாரித்து உள்ளது.



இந்த அதிசய விமானத்தின் சிறப்புகள் வருமாறு:-

★ தரை, ஆகாயத்தைப் போலவே தண்ணீருக்குள்ளும் வேகமாகச் செல்லும்.

★ பற்றரிகளைக் கொண்டு இயங்கும்.

★ ஆயிரம் அடி ஆழத்துக்கு கீழும் தண்ணீரின் அழுத்தத்தை தாங்கி இயங்கும் திறனுடையது.

★ 11 கிலோமீற்றர் வேகத்தில் செல்லக்கூடியது.

★ இதன் இறக்கைகள் பல்வேறு திசைகளிலும் திரும்பிச் செல்ல உதவியாக இருக்கும்.

★ ஆளில்லாமலும் இயக்க முடியும்.

★ 360 டிகிரி சுற்றிலும் ( எதிரிகளை ) கண்காணிக்கும் வசதி உள்ளது.

★ மற்ற நீர்மூழ்கி கப்பலைப் போலவே சப்தமின்றி இயங்கி எதிரிகளை நிலைகுலையச் செய்யும்.

இந்த விமான தயாரிப்புப் பணியில் பங்குபற்றிய ஒரு ஆய்வாளர் கூறும் போது; தண்ணீருக்குள் இயங்கும் வகையில் 22 அடி நீளமுள்ள 2 குட்டி விமானங்கள் தயாரிக்கப்பட்டு உள்ளது. இவற்றைத் தயாரிக்க 1.20 கோடி செலவாகியது. இதன் வேகத்தை அதிகரிக்க ஆய்வு செய்யப்படுகிறது என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதயத்துடிப்பு அது உயிர்நாடி

**மனிதனை மட்டுமல்ல மனித இதயத்தையும் நெறி தவறச் செய்யும் மதுபோதை**

டாக்டர் வெ. நாகநாதன்

இதயம் என்ற சொல்லை எல்லா மனிதரும் அறிந்திருப்பார்கள். அதுபோலவே இதயத்துடிப்பு பற்றியும் யாவரும் அறிவர். எனினும் இவ் இதயத்துடிப்பில் ஒழுங்குமுறை மாற்றப்படும் போது ஏற்படும் பாரதூரமான விளைவுகள் பற்றியும் மாற்றங்களை உண்டுபண்ணும் காரணிகள் யாவை என்பதும் அறிந்தும் அறியாத விடயங்களே ஆகும்.

இதயத்துடிப்பின் சந்தம் தவறும் போது மாரடைப்பு, பாரிசவாதம் என்பன ஏற்படும். இவற்றுடன் அல்லாது திடீர் மரணம் போன்றனவும் ஏற்படலாம்.

*சிலவகை மருந்துகள்

*மதுபானங்கள்

* போதைவஸ்துக்கள் போன்றவை இதயத் துடிப்பினை ஒழுங்கற்றதாகவும் வீதத்தை அதிகரிப்பனவாகவுமே காணப்படுகின்றன.

இதயத்துடிப்பின் ஒழுங்குமுறை தவறுவதால் மற்றும் இதயத்துடிப்பு வீதம் அதிகரிப்பதால் இதயத்தின் வலுவான குருதிப் பாய்ச்சுகை குறைக்கப்படுகின்றது. இதனால், இதயத்தில் குருதி தேங்குதல் நிகழ்கின்றது. இதனூடு குருதி உறையும் வாய்ப்பு இதயத்தினுள் நிகழுகின்றது. உறைந்த குருதித் துணிக்கைகள் தொடர்ந்தும் இதய அதிர்வால் உடைக்கப்பட்டு சிறுதுணிக்கைகள் ஆக்கப்பட்டு குருதியினுடைய குருதிக்குழாய்களினூடு பயணிக்கும்.

இவ் உறைந்த குருதிச் சிறுதுகள்கள் குருதிக்கலன்களை அடைக்குந் தகவுடையன. இதனை நாம் எமது நடைமுறை நாளாந்த வாழ்வில் காணக்கூடிய உதாரணத்தோடு எடுத்து நோக்கின் எமது வீடுகளில் காணப்படும் கழிவு நீர்க்குழாய்கள் சில திண்மக் கழிவுகளால் அடைபடுவது போன்ற ஒரு நிகழ்வ என்பதை உணரலாம். அதுபோன்றே மேற்படி குருதிக்குழாய்களிலும் உறைந்த குருதியின் உடைந்த சிறுதுகள் அடைப்பதால் குறித்த பாகத்திற்கு குருதி விநியோகம் தடைப்படும். இக்குறித்த பாகம் மூளை எனின் பாதிப்பை பாரிச வாதம் (Storke) எனவும் அதுபோலவே இதயத்திற்கு குருதி வழங்கும் குழாய்கள் முடியுருநாடி எனப்படும். (Coronary Arteries) இல் ஏற்படும் அடைப்பு (Heart Attack) மாரடைப்பு என்றும் பெயர் கொள்ளப்படும்.

இவ் இதயத்துடிப்பின் ஒழுங்குதவறும் நிலைஏற்படும் சந்தர்ப்பத்தை வலுவூட்டும் நிகழ்வாகவே மாணவர்கள், உத்தியோகத்தர்கள் தமது விடுமுறை நாளுக்கு முன்னைய நாளில் விருந்து நிகழ்வில் மதுபானத்தை மிகையளவில் அருந்தும் நிகழ்வு காணப்படுகின்றது. இந்நிலையில் ஏற்படும் இதயப்பாதிப்புக்கள் (Holiday heart syndrome) என்று பெயரிட்டு அழைக்கப்படும்.

இதன்போது

*நெஞ்சு படபடப்பு

*களைப்பு


* தலைச்சுற்று

*மயக்கம்

*நெஞ்சுவலி

*மூச்சுவிட சிரமம் என்பனவும் இவற்றைவிட பாரிசவாதம், மாரடைப்பு, திடீர் மரணம் என்பனவும் ஏற்படுகின்றது.

இவ்வாறு மதுபானம் அருந்துவதால் Epinephrine என்னும் பதார்த்தம் குருதியில் சுரக்கப்பட்டு அதிகரிப்பதால் பரிவு நரம்புத்தொகுதி தூண்டப்பட்டு இதயத்துடிப்பு வீதம் அதிகரிக்கின்றது. அது அன்றி அதன் ஒழுங்கும் தவறுகின்றது. ஈற்றில் மேற்கூறிய நோய்நிலையை நோக்கிச் செல்கின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெனிஸை விட...

டெனிஸ் அரங்கில் ரஷ்ய வீராங்கனைகளுக்கு என்று தனி மவுசு உண்டு.அன்னா கோர்னிகோவா,மரியா ஷரபோவா,சபினா போன்றவர்கள் தங்களது ஆட்டத்தால் மட்டுமல்லாமல் அழகாலும் ரசிகர்களை கிறங்கடிப்பார்கள்.இதில் மொடலிங் துறையிலும் அசத்தினார் கோர்னிகோவா.இந்த வரிசையில் தற்போது ஷரபோவாவும் சேர்ந்துள்ளார்.இவர் பேஷன் டிசைனிங்கிலும் கூடுதலாக கவனம் செலுத்தி வருகிறார்.

இளம் வயதில் சர்வதேச டெனிஸ் அரங்கில் கால்பதித்தவர் ரஷ்யாவின் மரியா ஷரபோவா(22 வயது), இவர் தனது 17 ஆவது வயதில் விம்பிள்டன் பட்டம் வென்று சாதித்தார். அதன்பின் பிரெஞ்ச் ஓப்பன் யு.எஸ்.ஓப்பனில் கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற இவர் நம்பர்-1 வீராங்கனையாக வலம் வந்தார்.பின்னர் வலது தோள் மூட்டில் காயமேற்பட பெரும் சரிவைச் சந்தித்தார்.




*நல்ல உயரம்:* தற்போது 14 ஆவது தரவரிசையில் உள்ள இவரது கவனம் டெனிஸ் அரங்கிலிருந்து பேஷன் ஷோ பக்கம் திரும்பியுள்ளது. ஹொட்டஸ்ட் டெனிஸ் வீராங்கனைகள் குறித்து மாக்சிம் பத்திரிகை நடத்திய கருத்துக்கணிப்பில் தொடர்ந்து நான்காவது ஆண்டாக முதலிடம் பெற்றுள்ளார். இதற்கு இவரது 6 அடி 2 அங்குலம் உயரமே முக்கிய காரணம்.

இவரை மொடலாக ஒப்பந்தம் செய்ய பல நிறுவனங்களும் போட்டி போடுகின்றன.சமீபத்தில் ஒரு மொபைல் போனுக்கு விளம்பரமொடலாக தோன்றி அசத்தியுள்ளார்.இவருக்கு பேஷன் டிசைனிங்கிலும் ஆர்வம் உண்டாம்.

*டிசைனிங் ஆர்வம்:* நவீன ஆடைகளில் தனது கை வேலைப்பாடுகளை காண்பிக்க போகிறாராம் ஷரபோவா. கடந்த வாரம் சிலி நாட்டுக்குச் சென்ற இவர் சாண்டியாகோ நகரில் நடந்த பேஷன் ஷோவில் தனது டிசைன்ஸ் அடங்கிய ஆடைகளுடன் கலந்து கொண்டார்.இதுகுறித்து ஷரபோவா கூறுகையில்;

டெனிஸ் போட்டிகளில் சாதிப்பது தான் எனது முதல் இலக்கு.தோள் மூட்டுக் காயத்தால் நீண்ட நாட்கள் அவதியுற்றேன். தற்போது பூரணமாக குணமடைந்துள்ளேன். அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் நடக்கும் அவுஸ்திரேலிய டெனிஸ் ஓப்பன் தொடரில் சிறப்பாக செயல்பட்டு பட்டம் வெல்ல காத்திருக்கிறேன்.

டெனிஸ் தவிர கற்பனைத்திறன் நிறைந்த டிசைனிங் துறையை மிகவும் விரும்புகிறேன். இந்த துறையில் நல்ல திறமை பெற்றுள்ளேன். எதிர்காலத்தில் எனது வாழ்க்கை இத்துறையில் பிரகாசமாக இருக்கும் என்றார்.





# அடிக்கடி மோத ஆயத்தம்

ஜமேக்காவின் ஒலிம்பிக் மற்றும் உலக சாம்பியன் உசைன் போல்ட், சக புயல்வேக வீரர்களான டைசன் கே, பொவல் ஆகியோருடன் அடுத்த ஆண்டு அடிக்கடி போட்டியிடவிருக்கிறார்.

'டயமண்ட் லீக் சேர்க்யூட்' என்ற புதிய போட்டித் தொடரில் அவர்கள் அடுத்த ஆண்டு மோதவிருக்கிறார்கள். அந்த போட்டியின் அமைப்பாளர்களுக்கு சர்வதேச தடகள சம்மேளன நிர்வாகிகளும் இதை அறிவித்தனர்.

உசைன் போல்ட்டின் முக்கிய போட்டியாளர்களான சக நாட்டவர் அசாபா பொவலும், அமெரிக்கா வீரர் டைசன் கேயும் 14 போட்டிகளில் சந்திக்கும் விதத்தில் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

எதியோப்பியாவைச் சேர்ந்த நீண்டதூர ஓட்ட வீரரான கெனனிசா பெக்கேலே, ரஷ்யாவின் தடி ஊண்டிப்பாய்தல் ('போல் வோல்ட்') வீராங்கனையான எலினா இசின்பயேவா, அவுஸ்திரேலியாவின் ஸ்ரீவ் ஹூக்கர், 400 மீற்றர் ஓட்ட வீராங்கனை சான்யா ரிச்சர்ட்ஸ் (அமெரிக்கா), உயரம் வீராங்கனை பிளாங்கா விளாசி (குரோசியா), ஈட்டி எறியும் வீராங்கனை ஆன்ட்ரியாஸ் தொர்க்கில்ட்சன் (நோர்வே) ஆகியோர் ஒப்பந்தத்தில் உள்ள மற்ற வீர, வீராங்கனைகள்.



எல்லோரும் குறைந்தபட்சம் எட்டுப் போட்டிகளில் பங்கேற்பதற்கு ஒப்புக்கொண்டுள்ளனர். போல்ட், கே, பொவல் ஆகியோர் ஒருவரையொருவர்சந்திப்பதற்கு உத்தரவாதமளித்துள்ளனர். பல போட்டிகளில் இந்த முன்னணி வேகப் புயல்களில் இருவர் பங்கேற்பர். குறிப்பிட்ட சில போட்டிகளில் மூவரின் மோதலும் உண்டு.

'நான் போல்ட்டுடன் குறைந்தபட்சம் மூன்று முறை ஓடுவேன்' லீக்கின் அதிகார பூர்வ ஆரம்பத்துக்கு முன் ஒரு போட்டியில் கே சொன்னார்.

இந்தத் தொடரானது, ஐரோப்பிய வீரர்கள் மட்டும் பங்கேற்கும் ஆறு போட்டிகளுடன் கூடிய 'கோல்டன் லீக் சேர்க்யூட்' போட்டிக்கு மாற்றாக அமையும். போட்டிகள் ஆசியா, ஐரோப்பா, மத்திய கிழக்கு ஆசியா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் நடைபெறும். மே கடைசியில் தொடங்கி ஆகஸ்ட் வரை போட்டிகள் நடக்கும். பல கோடி ரூபா பரிசுத் தொகை.

வீர, வீராங்கனைகள் 32 வகையான போட்டிகளில் பங்கேற்க வேண்டியிருக்கும். அனைத்துப் போட்டிகளின் முடிவில் அதிக புள்ளிகள் பெறுபவருக்கு பல வைரங்கள் பொதித்த வைரக் கேடயம் பரிசாக வழங்கப்படும். இந்தத் தொடரின் நோக்கம், முதல் தடகளவீரர்களுக்குமிடையே அதிக போட்டியை உருவாக்குவதும், கூடுதல் சர்வதேச வாய்ப்பை ஒரே அமைப்பின் கீழ் வழங்குவதுமாகும்.

'கடந்த சில சீசன்களில் தடகளத்துக்கு ஒரு வருடாந்திர அட்டவணை அமைப்பையும், ஒரு குறிப்பிட்ட திட்டத்தையும் உருவாக்க முயன்றோம். ஆனால் அது செயல்பாட்டுக்கு வரவேயில்லை' என்று 'டயமண்ட் லீக்' மற்றும் சூரிச் போட்டியின் துணைத்தலைவர் பேட்ரிக் மேக்யார் தெரிவித்துள்ளார்.

இந்தப் போட்டிச் சுற்றுக்கு இதுவரை அனுசரணையாளர்கள் யாரும் கிட்டவில்லை. ஆனால் தொலைக்காட்சி உரிமை நன்றாகப் போய்க் கொண்டிருக்கிறது என்று ஐ.எம்.ஜி நிறுவனத்தின் மேக்யார் மற்றும் கிறிஸ்ரியன் ஹைசன் ஆகியோர் தெரிவித்திருக்கின்றனர்.



தொலைக்காட்சி உரிமையை விநியோகிப்பதற்கான ஒப்பந்தத்தை இந்த நிறுவனத்துக்கு 'டயமண்ட் லீக்' வழங்கியுள்ளது. 'நிறைய விஷயங்கள் ஏற்கனவே முடிக்கப்பட்டு கையெழுத்திடப்பட்டு விட்டன' என்கிறார் மேக்யார்.

தென் ஆபிரிக்காவில் அடுத்த ஆண்டு ஜூன் 11 முதல் ஜூலை 11 ஆம் திகதி வரை நடைபெறும் உலகக் கிண்ணப் போட்டியின் போது 'டயமண்ட் லீக்' நான்கு பிரிவு போட்டிகள் நடைபெறும் போதும், கால்பந்து போட்டியின் போது தடகள போட்டிகள் இல்லாமல் பார்த்துக்கொள்ள முயல்கிறார்கள். ஒவ்வொரு பிரிவிலும் குறைந்த பட்சம் 15 போட்டிகள் நடைபெறும்.

லண்டனில் ஆகஸ்ட்டில் நடைபெறும் இரண்டு நாள் நிகழ்வில் 27 போட்டிகளும் சூரிச் மற்றும் பிரசல்ஸில் 16 போட்டிகளும் நடைபெறும். 14 பிரிவு போட்டிகளிலும் 100 மீற்றர் மற்றும் 200 மீற்றர் போட்டிகள் சமமாகப் பிரிக்கப்பட்டிருக்கும் என்று 'டயமண்ட் லீக்' போட்டி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. உருவாகும் இந்தப் புதிய சுற்று, உலகத்தடகள ரசிகர்களிடம் பெரும் ஆர்வத்தைக் கிளப்பியிருக்கிறது என்பது உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிக டெஸ்டில் ஆட வேண்டும்

**ச**மீபத்தில் இலங்கை அணிக்கெதிரான டெஸ்ட் தொடரை வென்றது இந்திய அணி. இதன்மூலம் 77 ஆண்டுகால டெஸ்ட் வரலாற்றில் முதன் முதலாக 'நம்பர்-1' இடத்தைக் கைப்பற்றி அசத்தியது. இத்தொடரில் இந்தியாவின் வெற்றி நாயகனாக ஜொலித்த வீரர் வீரேந்திர செவாக். தனது செயல்பாடுகள் குறித்து அவர் அளித்த பேட்டி;

இலங்கை அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் சிறப்பாக செயல்பட்டது மகிழ்ச்சியளிக்கிறதா?

எனது செயல்பாடுகள் திருப்தியளிக்கிறது. இருப்பினும், இந்தியா 'நம்பர்-1' இடத்தைக் கைப்பற்றியது தான் மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. தனியொரு வீரரோ அல்லது நானோ அதிக ஓட்டங்கள் குவித்ததினால் இந்த உயர்வு கிடைக்கவில்லை. இந்த மைல்கல்லை எட்ட அணியினரின் கூட்டு முயற்சி தான் முக்கிய காரணம். தவிர, இந்த இலக்கை எட்டும் தகுதி இந்திய அணிக்குண்டு.

டெஸ்ட் அரங்கில் இந்தியாவை முதலிடத்துக்குக் கொண்டு வருவதே எனது இலட்சியம் என கடந்த சில மாதங்களுக்கு முன் கூறியிருந்தீர்கள். அது தற்போது நிறைவேறியுள்ளது பற்றி உங்கள் கருத்து?

கடந்த 18 மாதங்களுக்கு முன் அணியின் பயிற்சியாளர் ஹேஸ்டன் கூறுகையில்; 'நம்பர்-1' இடத்தை நம்மால் கட்டாயம் கைப்பற்ற முடியும். உலகின் மற்ற அணிகளில் இடம்பெற்றுள்ள வீரர்களை விட இந்திய அணியில் இடம்பெற்றுள்ள வீரர்கள் திறமைமிக்கவர்கள் எனக் கூறினார். அதன்படி ஒவ்வொரு வீரரும் தனது பொறுப்பை உணர்ந்து செயல்பட்டனர்.



அதனால், சாதிக்க முடிந்தது. ஹேஸ்டனை மிகச் சிறந்த பயிற்சியாளராக நான் கருதுகிறேன். அவரது பயிற்சியின் கீழ் டெஸ்ட் அரங்கில் உயரிய இலக்கை அடைந்த இந்திய அணி ஒருநாள் போட்டிகளிலும் 'நம்பர்-1' இடத்தை மிக விரைவில் எட்டும்.

மும்பை ஆடுகளத்தில் இலங்கை அணி ஓட்டமெடுக்கத் திணறியது. ஆனால், நீங்கள் முதல் இனிங்ஸில் 293 ஓட்டங்கள் குவித்தது பற்றிக் கூறுங்கள்?

அணிக்கு நல்ல தொடக்கம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது தொடக்க வீரரான எனது கடமை. அப்போட்டியில் தமிழக வீரர் முரளி விஜய் நல்ல ஒத்துழைப்பைக் கொடுத்தார். 50 அல்லது 60 ஓட்டங்கள் எடுத்த பின் மிகப் பெரிய இலக்கை எட்டுவதில் எனக்கு சிரமம் இருக்காது.

மும்பை டெஸ்டில் மேற்கிந்திய ஜாம்பவான் பிரையன் லாராவின் (400 ஓட்டம்) சாதனையை நீங்கள் தகர்ப்பீர்கள் என அனைவரும் எதிர்பார்த்தனர். உங்கள் மனதிலும் அந்த எண்ணமிருந்ததா?

மும்பை டெஸ்டில் 300 ஓட்டங்களை எட்ட வேண்டுமென்று நினைத்தேன். ஆனால், அது நடக்கவில்லை. ஒருவேளை 300 ஓட்டங்களைக் கடந்திருந்தால் 400 ஓட்டங்கள் பற்றி நினைத்திருப்பேன். இருப்பினும், சாதனைகளுக்காக நான் கவலைப்படுவது கிடையாது.

நீங்கள் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய போட்டிகளில் இந்திய அணி வெற்றி பெறுவது பற்றி உங்கள் கருத்து?

அணியின் வெற்றிக்காக சிறப்பாகச் செயல்படுவது எனது கடமை. 10,50 அல்லது 100 என எவ்வளவு ஓட்டங்கள் எடுத்தாலும் அணி வெற்றி பெற வேண்டுமென்பதே எனது விருப்பம்.

பங்களாதேஷுக்கு எதிரான ஒரு தொடர் தவிர, அடுத்து வரும் ஆறு மாதங்களுக்கு இந்திய அணிக்கு அதிக டெஸ்ட் போட்டிகள் இல்லை என்பது வருத்தமளிக்கிறதா?

ஆம். இது குறித்து இந்திய கிரிக்கெட் சபையின் வீரர்கள் கலந்து ஆலோசிக்கவுள்ளோம். ஆனால், எதுவும் எங்கள் கையில் இல்லை. அடுத்து வரும் ஆண்டுகளில் இந்திய அணி அதிக டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்குமென எதிர்பார்க்கிறேன்.




# டைகர் வூட்ஸின் உலகம்

**கோ**ல்ப் அரங்கின் உச்ச நட்சத்திரமாக விளங்கிய டைகர்வூட்ஸ் தற்போது சர்ச்சை நாயகனாக மாறியுள்ளார். இவருடன் தொடர்பு வைத்திருந்த பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே போகிறது. இவரைப்பற்றிய செய்திகள் தான் ஊடகங்களில் அன்றாடம் வெளியாகின்றன.

இதில் ஜுபிடர் தீவில் இவர் கட்டி வரும் மிகப் பிரமாண்டமான மாளிகை பற்றி அதிகம் பேசுகின்றனர். இந்த வீட்டில் மனைவியுடன் குடியேறுவாரா அல்லது 10 பெண்களில் யாருக்காவது அதிர்ஷ்டம் அடிக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

உலகின் பணக்கார கோல்ப் வீரர் அமெரிக்காவின் டைகர்வூட்ஸ். கடந்த மாதம் புளோரிடாவில் உள்ள தனது வீட்டிலிருந்து காரில் புறப்பட்ட இவர் விபத்தில் சிக்கினார்: பின்னர் மனைவி எலின் நார்டிகிரன் தான் இவரைக் காப்பாற்றினார். ஆனாலும் டைகர் வூட்சின் புதிய பெண் சிநேகிதியான ரேச்சல் உகிடெல் தான் பிரச்சினைக்குக் காரணம் என வேறுவிதமாக கூறப்பட்டது. இது தொடர்பாக ஏற்பட்ட மோதலில் மனைவி எலின் தாக்கியதில் டைகர்வூட்ஸ் முகத்தில் கீறல் உட்பட காயம் ஏற்பட்டதாக கூறப்பட்டது.

**பெண்கள் வலையில்:** இதற்குப் பின் டைகர்வூட்சுடன் தொடர்பு வைத்திருந்த பெண்களின் பட்டியல் வெளியாக பிரச்சினை விஸ்வரூபமெடுத்தது. நியூயோர்க் கிளப்பில் பணிபுரியும் ரேச்சல் உகிடெல் தவிர ஜெய்மி கிரப்ஸ், கலிகா மகியுன், ஜேமிஜங்கர்ஸ், மிண்டி லாவ்டன், கோரி ரிஸ்ட், ஹோலி சாம்ப்சன் ராக்சி மற்றும் பிரிட்டனைச் சேர்ந்த இருவருடன் சேர்ந்த 10 பெண்களுடன் டைகருக்குள்ள தவறான தொடர்பு அம்பலமானது. இவர்களில் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு இரகசியத்தை வெளியிட்டு பரபரப்பு ஏற்படுத்த மனைவி எலின் வீட்டை விட்டு வெளியேறினார்.

**யாருக்கு வாய்ப்பு:** இதையடுத்து புளோரிடாவில் உள்ள ஜுபிடர் தீவில் டைகர்வூட்ஸ் கட்டிவரும் புதிய வீட்டில் அவருடன் சேர்ந்து குடியேறப் போவது யார் என்ற கேள்வி எழுந்துள்ளது. இங்கு அமெரிக்காவின் பெரும் பணக்காரர்கள் தான் வாழ்கின்றனர். இத்தீவில் மொத்தம் 620 பேர் மட்டுமே வசிக்கின்றனர். இங்கு தான் அமெரிக்காவிலேயே தனிநபர் வருமானம் (மாதம் மூன்று கோடி ரூபா) அதிகம்.

குளிர்காலத்தில் முன்னாள் அதிபர் ஜோர்ஜ் புஷ் கூட இங்கு தான் தங்குவார் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள். இத்தீவில் 2006 இல் சுமார் 12 ஏக்கரை 675 கோடி ரூபாவுக்கு வூட்ஸ் வாங்கினார். இதில் 9 ஆயிரம் சதுர அடியில் மிகப் பிரமாண்டமான மாளிகை கட்டுகிறார். இதற்கு வெள்ளை செங்கல், நீலநிறக் கண்ணாடி பயன்படுத்தப்படுகிறது. 15 படுக்கை அறைகள், மருத்துவ குணமுடைய நீருற்று, பயிற்சிக்கு இரண்டு தளங்களில் ஜிம் கட்ட உள்ளார்.

150 கோடி ரூபா மதிப்பிலான தனது உல்லாசப் படகையும் இங்கு நிறுத்தவுள்ளார். புதிய வீட்டின் டிசைன் பற்றி எதுவும் சொல்லக்கூடாது என பணியாளர்களிடம் உறுதிமொழி வாங்கியுள்ளார்.



## வூட்ஸின் பல்லை உடைத்த மனைவி

**உ**லகின் நம்பர் 1 கோல்ப் வீரரான அமெரிக்காவின் டைகர் வூட்ஸிற்கு ஏகப்பட்ட பெண்களுடன் உறவிருப்பதாக வெளியான செய்திகளை அடுத்து அவரது மனைவி எலின் வூட்ஸ் மீது ஆத்திரத்தில் கைத்தொலைபேசியை விட்டெறிய அது அவரது பல்லைப் பதம் பார்த்ததாக பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சமீபமாக கார் விபத்து வழக்கில் சிக்கி அவதிப்பட்டு வரும் நிலையில், டைகர் வூட்ஸ் பெயருக்கு மேலும் சில இழுக்குகள் வந்து சேர்ந்தன. அதாவது, இதுவரை சுமார் 12 பெண்கள் வூட்ஸுடன் தங்களுக்கு உடல் ரீதியான உறவு இருப்பதாக அப்பட்டமாகத் தெரிவித்துள்ளனர்.

இதனைக் கேள்விப்பட்ட மனைவி எலின் நேற்று முன்தினம் இரவு வூட்ஸுடன் ஏற்பட்ட வாக்குவாதத்தில் ஆத்திரமடைந்து கைத்தொலைபேசியை அவரது முகத்தின் மீது விட்டெறிந்தார்.

எலினுக்கும் உலகின் செல்வந்த கோல்ப் வீரரான வூட்ஸிற்கும் இடையே 2004 ஆம் ஆண்டு திருமணம் நடந்தது. இருவருக்கும் சாம் என்ற இரண்டு வயது மகளும் சார்லி என்ற 10 மாத ஆண் கைக்குழந்தையும் உள்ளனர்.

இந்தளவுக்கு கள்ளத் தொடர்பு விவகாரம் வெளியாகியும் வூட்ஸின் மனைவி எலின் விவாகரத்து கோரப் போவதில்லை என்று அவரது நெருங்கிய நண்பர் ஒருவர் தெரிவித்துள்ளார். அதாவது குழந்தைகளுக்குப் பெற்றோர் இருவரும் தேவை என்பதில் உறுதியாக இருக்கிறாராம் எலின்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமணமா?...

## அழகுக்கான சத்திரசிகிச்சை நிலையங்களை நோக்கி படையெடுக்கும் இளம் சந்ததியினர்

**லண்டன்:** திருமண நிகழ்வுக்கான ஏற்பாடுகள் என்றாலே அனைவரது மனக்கண்ணின் முன்தோன்றுவது மண்டபம், விருந்துபசாரப் பண்டங்கள், வண்ண வண்ண ஆடைகள் மற்றும் பூ அலங்காரங்கள் போன்றவையே.

ஆனால், தற்போது திருமணம் என்றவுடனேயே மணமகன்களும் மணமகள்களும் அழகுக்கான சத்திர சிகிச்சை நிலையங்களை நோக்கிப் படையெடுப்பதாக பிரிட்டனில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்று தெரிவிக்கின்றது.

முன்னர் சத்திர சிகிச்சையின்றி நோயைக் குணப்படுத்த என்ற கட்டத்தில் மட்டுமே நோயாளிகளும் குடும்பத்தவர்களும் கடும் அச்சத்திற்கு மத்தியில் சத்திர சிகிச்சைக்கு இணங்கினர்.

ஆனால், இன்றைய சந்ததியினரோ அவசியமற்ற சிறு தேவைகளுக்குக் கூட சத்திர சிகிச்சையை நாடுகின்றனர்.

என்ன செய்வது? காலில்லை என்றவனுக்கு ஒரு கவலை. காலுக்கு செருப்பில்லை என்றவனுக்கு மற்றொரு கவலை. இவ்வாறு கவலைகள் அதிகரித்துச் செல்லத் தேவைகளும் அதிகரிக்கத் தானே செய்யும்?

பிரிட்டனில் மணமகள்களாகப் போகின்ற 50 வீதத்தினரும் மணமகன்களாகப் போகின்ற 39 வீதத்தினரும் அழகுக்கான சத்திர சிகிச்சை நிலையங்களை நாடியிருப்பதாக ஆய்வொன்று தெரிவித்துள்ளது.

ஆண்களதும் பெண்களதும் வாழ்வில் திருமண நாள் என்பது ஒருமுறை மட்டுமே வருகின்ற மிகவும் முக்கிய நாளாக இருப்பதால் பெருந்தொகையான இளஞ்சந்ததியினர் திருமண நாளன்று தமது தோற்றம் உட்பட ஒவ்வொன்றும் சிறப்பானதாக இருக்க வேண்டுமெனக் கருதுவதாக அழகுச் சத்திர சிகிச்சைகளுக்கான ஆலோசனைகளை வழங்கும் இணையத்தளம் தெரிவிக்கின்றது.

58 வீதமான பெண்களும் மூன்றிலொரு ஆண்களும் அழகுச் சிகிச்சை குறித்த ஆலோசனைகளைத் தம்மிடம் கேட்டறிந்துள்ளதாக இவ் இணையத்தளம் தெரிவிக்கின்றது.

நிச்சயதார்த்தம் நடைபெற்ற 512 பெண்கள் மற்றும் 509 ஆண்களிடம் மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்வில் 11 வீதமான பெண்களும் 9 வீதமான ஆண்களும் ஏற்கனவே இவ்வாறான சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

புகைப்படங்களில் தாம் மிக அழகாகத் தோன்ற வேண்டும் என்பதாலேயே தாம் இவ்வாறான சிகிச்சைகளை மேற்கொள்ள விரும்புவதாகவும் இதன் மூலம் அழகாக இருக்கிறோம் என்ற நம்பிக்கையுணர்வு தம்மிடம் தோன்றுவதாகவும் 64 வீதமான பெண்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, தமக்குத் துணையாக வரப்போகிறவர்களின் வேண்டுகோளின் பேரிலேயே இவ்வாறான சிகிச்சைகளைத் தாம் மேற்கொள்வதாக பெரும்பாலான ஆண்கள் கூறியுள்ளனர்.

பற்களை வெண்மையாக்குவது முதல் மார்பின் அளவுகளை மாற்றியமைப்பதுவரை மேற்கொள்ளப்படும் இவ்வாறான சத்திர சிகிச்சைகளில் மேலதிக கொழுப்புகளை குறைத்தல் மற்றும் தோலின் கவர்ச்சியை மெருகூட்டல் போன்ற சிகிச்சைகளையே பெரும்பாலானோர் நாடுவதாக இவ் ஆய்வு தெரிவிக்கின்றது.

## சர்வதேச வலம்

— ச.துஷ்யந்தினி

## 91 தடவைகள் மீறப்பட்ட வெள்ளை மாளிகையின் பாதுகாப்பு

**வாஷிங்டன்:** வெள்ளை மாளிகையின் கடும் பாதுகாப்பு நடைமுறைகள் 91 தடவைகள் ஏமாற்றம் கண்டிருப்பதாக அந்நாட்டு பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லமாக வெள்ளை மாளிகை விளங்குகின்றது. அமெரிக்க ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர் தனது பதவிக்காலம் முடியும் வரை இங்கு தங்கியிருப்பதால் 24 மணி நேரமும் இங்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருக்கும்.

அவ்வளவு ஏன்? உலகிலேயே அதியுயர் நவீன பாதுகாப்பு நடைமுறைகள் முன்னெடுக்கும் இடமாக வெள்ளைமாளிகை விளங்குகிறது.

ஆனால், கடந்த மூன்று தசாப்தங்களில் 91 தடவைகள் வெள்ளைமாளிகையின் பாதுகாப்பு அதிகாரிகளை ஏமாற்றி சாதாரணமானவர்கள் அவ்வளாகத்துக்குள் நுழைந்துள்ளனர்.

பாதுகாவலர்களின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு சிலர் மாளிகைக்குள் நுழைந்து விடுவதாக இப்பத்திரிகை தெரிவிக்கின்றது.

அண்மையில் அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு ஜனாதிபதி பராக் ஒபாமா அளித்த விருந்தில் கூட இவ்வாறானதொரு பாதுகாப்புக் குளறுபடி ஏற்பட்டது நினைவிருக்கலாம்.

இந்த விருந்திற்கு அழைப்பிதழ் அனுப்பப்பட்டவர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர். ஏனையவர்கள் வெள்ளை மாளிகை பிராந்தியத்திற்கு அருகில் கூட அனுமதிக்கப்படவில்லை.

ஆனால், இவ் விருந்தில் பாதுகாப்பு நடைமுறைகளை ஏமாற்றி அழையா விருந்தாளிகளாக தாரிக் – மிஷெல் ஸாலாகி தம்பதியினர் கலந்து கொண்டனர். இச்சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்ததுடன், அமெரிக்க உளவுத்துறையையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருந்தது.

இந்நிலையிலேயே இதுபோன்ற சம்பவங்கள் வெள்ளைமாளிகைக்கு புதிதல்ல என்ற தகவலை அந்நாட்டு பத்திரிகை வெளியிட்டுள்ளது.

1980 ஆம் ஆண்டு தொடக்கம் கடந்த 29 ஆண்டுகளில் இதுவரை 91 தடவைகள் இதுபோன்ற பாதுகாப்புக் குளறுபடிகள் இடம்பெற்றமை தெரியவந்துள்ளது.

முன்னொரு தடவை சிறிய வான் ஒன்றில் ஒரு குடும்பமே வெள்ளை மாளிகைக்குள் புகுந்துள்ளது.

இவர்கள் அப்போதைய ஜனாதிபதி பில் கிளின்டனின் நெருங்கிய தொடர்புடையவர்கள் என்று பொய் கூறியே வெள்ளை மாளிகைக்குள் நுழைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.




அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் 10 வயது தோற்றத்தைக் குறிக்கும் வெண்கலச் சிலையொன்று இந்தோனேசிய தலைநகர் ஜகார்த்தாவில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. சிறுபராயத்தை ஒபாமா இந்தோனேசியாவில் கழித்ததை நினைவு கூரும் முகமாகவும் சிறுவர்களை ஊக்குவிக்கும் முகமாகவும் அமைக்கப்பட்ட இச்சிலை அமைதிக்கான நோபல் பரிசை ஒபாமா பெற்ற தினமான கடந்த 10 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தனிப்பட்ட குடும்ப விழாவாக விரைவில் செல்சியாவின் திருமணம்

**வாஷிங்டன்:** அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்டன்-ஹிலாரி தம்பதிகளின் மகள் செல்சியாவின் திருமணம் குடும்ப விழாவாகவே நடைபெறுமென அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளின்டன் தெரிவித்துள்ளார்.

என்மகள் செல்சியாவின் திருமணம் தனிப்பட்ட குடும்ப விழாவாகவே நடைபெறுமென ஹிலாரி தெரிவித்துள்ளார்.

அமெரிக்க முன்னாள் எம்.பி. மார்க்கோலிசின் மகன் மார்க் மெஜ்வின்ஸ்கிக்கும் செல்சியாவுக்குமிடையிலான திருமண நிச்சயதார்த்தம் கடந்த வாரம் நடைபெற்ற நிலையில் விரைவில் திருமணம் நடைபெறவுள்ளது.

இதுகுறித்து ஹிலாரி கூறுகையில்;

என் மகளின் திருமணம் குறித்து நான் மிகுந்த மகிழ்ச்சியடைந்துள்ளதுடன், மிகச் சிறந்த இளைஞர் அவருக்கு கணவனா அமையப்போவது குறித்து பெருமையடைந்துள்ளேன்.

நெருக்கடியான எனது அலுவலகப் பணிகளுக்கிடையில் மகளின் திருமண வேலைகளைப் பார்ப்பது கடினமாக இருக்கிறது.

எனக்காகக் கூட நேரம் ஒதுக்க முடியாத நிலையிலும் தேவையேற்படின் எந்த நேரத்திலும் என்னை அழைக்குமாறு மகளிடம் கூறியுள்ளேன்.

செல்சியாவின் திருமணம் குடும்ப விழாவாகவே இருக்கும். நெருங்கிய உறவினர் மற்றும் நண்பர்களுக்கு மட்டுமே அழைப்பு விடுக்கப்படுமென தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்





# குறட்டைக்கும் நீரிழிவுக்கும் இடையேயான தொடர்பு

பெண்களே நீங்கள் நித்திரையில் அடிக்கடி குறட்டை விடுவதாக உங்கள் கணவர் நச்சரிக்கிறார் என்றால், அவருக்கு ஏற்படுகின்ற தொல்லைக்காக மாத்திரமல்ல, உங்களின் உடலாரோக்கியக் குறைபாட்டுக்காகவும் நீங்கள் வருத்தப்பட வேண்டும். ஏனென்றால் இந்தக் குறட்டை கணவரின் நித்திரையைக் குழப்புவதைவிடவும் பாரதூரமான பிரச்சினையுடன் சம்பந்தப்பட்டதாகும்.

கர்ப்பிணிகளாக இருக்கும் காலத்தில் அடிக்கடி குறட்டை விட்டுத் தூங்கும் பெண்கள் மற்றைய பெண்களை விடவும் கூடுதலான அளவுக்கு கர்ப்பகால நீரிழிவினால் பாதிக்கப்படக்கூடிய ஆபத்து இருக்கிறது. இதனால் தாய்க்கு மாத்திரமல்ல குழந்தைக்கும் சுகாதாரப் பிரச்சினைகள் தோன்றக்கூடும் என்று அமெரிக்காவின் சவுத் வெஸ்ரேன் பல் கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

கர்ப்பிணிகளாக இருக்கும் பெண்கள் மற்றைய பெண்களை விடவும் கூடுதலான அளவுக்கு குறட்டைவிடும் சாத்தியமும் அதிகரிக்கிறது என்றும் ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அடிக்கடி குறட்டை விடும் கர்ப்பிணிப் பெண் கர்ப்பகால நீரிழிவினால் பாதிக்கப்படக்கூடிய வாய்ப்பு 14.3 சதவீதம் அதிகமானதாகும். அதேவேளை, குறட்டை விடாத பெண் கர்ப்பகால நீரிழிவு நோயினால் பாதிக்கப்படக்கூடிய வாய்ப்பை 3.3 சதவீதமும் கொண்டிருக்கிறார்.

இதுவே குறட்டை விடும் பழக்கத்துக்கும் கர்ப்பகால நீரிழிவுக்கும் இடையிலான தொடர்பு குறித்து மேற்கொள்ளப்பட்ட முதன் முதலான ஆய்வு என்று அதைச் செய்த குழுவுக்கு தலைமை தாங்கிய மருத்துவ நிபுணர் பிரான் செஸ்கா ஃபக்கோ தெரிவித்திருக்கிறார்.

அதேவேளை, குறட்டை விட்டுத் தூங்கும் ஆண்களும் நீரிழிவு நோயினால் பாதிக்கப்படக் கூடிய ஆபத்தைக் கூடுதலான அளவுக்கு கொண்டிருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நொதேர்ண் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டாரால் யாழ்ப்பாணம், கே.கே.எஸ். வீதி 336ஆம் இலக்கத்தில் 2009 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.